June - 1935

JL
R673m21,N28
M35.8.6.
187107

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 8 No. 6.

OFFICE OF THE ... 2 - JUL 1935 MADRAS

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௮ | யுவ ஆண்டு ஆனித் திங்கள்<br>1935 ௵ ஜூன் ௴ | இதழ் ௬ |
|---|---|---|

உள்ளுறை

| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| சைவமும் தமிழிலக்கியமும் | ... | ... உ௪௧ |
| அப்பர் தேவாரம் அரும்பொருளகராதி | | ... உ௪௪ |
| பாடலித்த நாயகன் | ... | ... உ௫௫ |

ஆசிரியர் :—ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—அ. சிதம்பரநாத செட்டியார், B. A. (Hons.)

சைவ சித்தாந்த மகாசமாஜம்
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2. 1935 தனிப் பிரதி அணா 4.

உ

சிவமயம்

# இந்து மடங்களின் மசோதா

## சென்னை சட்டசபையில் நெ. 24—1934

இந்த மசோதாப்படி இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டம், மடங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் இனி ஊர்ஜிதத்திலிருக்கமாட்டாது என்றும், ஏதாவது கோர்ட்டுகள் மூலம் (Scheme) ஸ்கீம் ஏற்பட்டிருந்தால் அதுவும் இனி ஊர்ஜிதமாகாது என்றும் ஒருவிதி ஏற்பட்டிருக்கிறது. மற்றொரு விதி இஷ்டப்பட்ட மடங்களை மட்டும் இந்த மசோதாவிற் குட்படுத்த சர்க்காருக்கு அதிகாரமுண்டு என்று ஏற்பட்டிருக்கிறது.

**மற்றும் பொது விதிகளாவன:**—மடாதிபதிக்கு இனி மடத்துச் சொத்துக்களில் யாதொரு சம்பந்தமும் அனுபோகமும் கிடையா. மடத்தின் நிர்வாகமானது ஒரு (Executive) எக்சிக்யூட்டிவ் ஆபீஸரை வைத்து நடைபெற வேண்டியது. அவருக்கு போர்டார் சம்பளம் ஏற்படுத்தி அவரை நியமிக்க வேண்டியது. அவர் சிஷ்யர் என்று நினைக்கிறவர்கட்கு ஒரு ஜாப்தா பிறப்பிக்க வேண்டியது. அதற்கு ஆக்ஷேபனையுள்ளவர் போர்டில் ஒரு மாதத்திற்குள் மனுச் செய்துகொள்ள வேண்டியது. அவர்களுக்குள் (Election) தேர்வு செய்து சிலரை ஒரு கமிட்டியாக ஏற்படுத்த வேண்டியது. அதன் எண்ணம் போர்டார் தீர்மானம் செய்யவேண்டியது. அவர்கள் காலம் மூன்று வருஷம். அவர்களுக்கு உரிமை மடாதிபதிக்கும் (Executive) எக்சிக்யூட்டிவ் ஆபீசருக்கும் யோசனை சொல்லவேண்டியது. யோசனையைக் கேளாவிட்டால் போர்டாருக்கு மனுச் செய்ய வேண்டியது. போர்டார் செய்வதே முடிவான பைசல். மடாதிபதி ஸ்தானத்துக்கு விவகாரம் ஏற்பட்டாலும் மைனராயிருந்து சாட்டியண் யாரென்று விவகாரம் ஏற்பட்டாலும் இருக்கிற மடாதிபதி தேகபல்கமாயிருந்தாலும் புத்திக் கூர்மை இல்லாதவரா யிருந்தாலும் போர்டாரே மத்திய காலத்திற்கு ஒரு மடாதிபதியை நியமிக்கலாம். அவருக்கு மடாதிபதியினுடைய ஸ்தானம் ஏற்பட்டுவிடும். மடாதிபதியானவர் செலவுக்குத் திட்டம் எழுதிப் போர்டில் வைத்து அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டியது. அனுமதி பெறாமல் செலவு செய்ய அதிகாரமில்லை. எக்சிக்யூட்டிவ் ஆபீசரை இந்து மதத்தை அனுட்டிக்கிற எந்த வகுப்பாரிலிருந்தும் நியமிக்கலாம். அனேக மடங்களுக்கு ஒரே எக்சிக்யூட்டிவ் ஆபீசரை நியமிக்கலாம். அவருக்குக் காலம் 5 வருடம். அவரைத் திரும்ப நியமிக்கவுஞ் செய்யலாம். அவரை போர்டார் நீக்கவும் செய்யலாம். நீக்கினால் கவர்ன்மெண்டுக்கு அப்பீல் செய்துகொள்ள வேண்டியது. சகல தாவர சங்கம சொத்துக்களும், ரிக்கார்டுகளும் அவர் வசமே இருந்து வரவேண்டியது. வரவும் செலவும் அவரைப் பொறுத்தவை. அவர் கணக்கு வைத்து வரவேண்டியது. ரூபாய் 100-க்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தரை அவரே நியமனஞ் செய்யவேண்டியது. மேற்பட்ட சம்பளம் உள்ளவர்களை போர்டார் நியமிக்கவேண்டியது. வேலைக்காரர்கள்,

Registered No. M. 2330.

2 - JUL 1935

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு "

| மலர் ௮ | யுவ ஆண்டு ஆனித் திங்கள்<br>1935௵ ஜூன்மீ | இதழ் ௬ |
|---|---|---|

## சைவமும் தமிழிலக்கியமும்

[வை. சுந்தரேச வாண்டையார், ஆசிரியர், திருவையாறு]

(மலர் - ௮, இதழ் - ௫, ௨௬௦-ம் பக்கத் தொடர்ச்சி)

சிவனருளால் செந்தமிழுணர்ந்த தென்பொதிய முனிவரின் சீர்சால் மாணவராகிய தொல்காப்பியனார் இயற்றிய இலக்கணந்தான் இக்காலத்துள்ள தமிழ்நூல்களில் காலத்தால் முந்தியதெனத் தமிழறிஞர் பலரும் கூறுவர். அவ்வரும் பெரும் இலக்கண நூலுள்ளும் குறிப்பாகப் பல சைவநூற் கருத்துக்கள் அமைந்துள்ளவை அறிஞர்க்குப் புலனாகும்.

"வினையின் நீங்கிவிளங்கிய அறிவின் முனைவன்" என்பது முதலிய தொடர்கள் சைவநூற் சார்பினவே. வினையின் நீங்குதல் என்பது சிவபெருமானுக் குரிய எண் குணங்களில் ஒன்றாகிய இயல்பாகவே பாசங்களி னீங்குதலைக் குறிப்பதாகும்.

'விளங்கிய அறிவின்முனைவன்' எனவே, அறிவு விளங்கிய (இயற்கை யுணர் வினனாகிய) சத்துப்பொருளும், அறிவு விளங்காத அசத்துப் பொருளும், அறிவு விளங்கியும் விளங்காதும் உள்ள சதசத்துப்பொருளும் பெறப் படுதலின், இத் தொடரும் சைவத்தையே குறிப்பதாம்.

இன்னும் 'வினை' எனவே, செய்வினையும் (கருமங்கள்) அவ்வினைசெய்யும் ஆன்மாவும் அவ்வினையின் பயன்களாகிய இன்ப துன்பங்களும் அவற்றை ஆன்மாக்களுக்குச் சேர்விக்கும் கருத்தனாகிய முழுமுதற் கடவுளும் உண்மை பெறப் படுதலால் இது சைவத்தையே குறிப்பதாகும்.

இப்போது காணப்படும் சங்க இலக்கியங்களிலும் ஆங்காங்கு "ஆலமர்செல்வன்" "முக்கட்செல்வன்" "பிறவாயாக்கைப் பெரியோன்" முதலியவாய்ச் சிவபெருமான் திருப்பேர்கள் பேசப்படுதலாலும், சங்கநூற்களுக்குப்பின் எழுந்த சமண நூல்களிலும் "போகமார்த்த புண்ணியன்" (சீவகசிந்தாமணி) என்பது போலப் பலபெயர்களால் சிவபெருமான் பேசப் படுதலாலும், சிவனது பெருமையும் அவனது வழிபாடும் நம் நாட்டில் இடையறாது மக்களால் போற்றப் பட்டு வந்தது தெளியப்படும்.

பௌத்த சமண சமய இலக்கியங்களுக்குச் சற்று முன்னே பின்னே சைவசமய ஆசிரியர்களாகிய நால்வர் தோன்றிச் சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்தனர்.

அவர்கள் காலத்துக்குப் பின்எழுந்த தமிழ்த் தல புராணங்களும் பெரும்பான்மையும் சைவத்தை விளக்கத் தோன்றியவையே. அருண்மொழித் தேவராம் தெருண்மிகு பெரியாரருளிய திருத்தொண்டர் புராணமோவெனின், சைவத்துக்கோர் கண்ணும் தமிழுக்கோ ருயிருமாயுள்ளது.

பெரியபுராணம் சைவத்துக்குக் கண்; அதிலும் வலக்கண், பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம் சைவத்தின் இடது கண்; கந்தப்புராணம் சைவத்தின்நெற்றிக்கண். எமது ஆண்டவனுக்குள்ள முக்கண்களேபோல எமது சைவத்துக்கும் இவை மூன்றும் கண்களாகும். இது சைவ நன்மக்களின் கொள்கை.

பெரியபுராணம் தமிழ்மொழிக்கோர் உயிர்என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. தமிழ் நம்நாட்டார்க்குக் கற்றற்குரிய சிறந்தகருவி. அக்கல்விக்குப் பயன் இறைவனையறிந்து வழிபடல்.

இறைவனை எய்திப் பேரின்பந் துய்த்தார் வரலாற்றினைக் கூறி அவனை எய்தும் நெறியினை அங்கை நெல்லிபோல் விளக்கும் நூல் இப்பெரிய புராணம் ஒன்றே. நுண்பொருள்களை எடுத்துக் காட்டால் உணர்த்துவதே சிறந்தநெறி. அரும்பெரும் ஞான நூற்களாகிய சித்தாந்த சாத்திரங்களின் நுட்பங்களை யெல்லாம் சரித வாயிலாக விளக்கிக் காட்டும் தனித் தமிழ்நூல் இப்பெரிய புராணம் ஒன்றே. நடுநிலைமையோடு சொன்ன ஒருபாடலிலும்....தொண்டர்புராணம்...... தண்டமிழின் மேலாந்தரம் என்று திருவாய் மலர்ந்தருளப் பட்டுள்ளது. எனவே, தொண்டர்புராணம் தமிழின் உயிர் என்பதில் மிகை யொன்றுமில்லை.

சைவ சந்தான ஆசிரியன்மார்கள் அருளிய சித்தாந்த நூல்களனைத்தும் அத்தகையனவே. சிறுகாப்பியங்கள்* (பிரபந்தங்கள்) தோன்றிய காலத்தினும் சைவச் சார்பான சிறுகாப்பியங்களே மிகுதியாகத் தோன்றலாயின. அம்முறையில் தமிழும் சைவமும் வளர்த்த பெரியார்கள் பலருள் குமரகுருபரமுனிவர், சிவப்பிரகாசமுனிவர், மாதவச் சிவஞான முனிவர் முதலியோர் மிகச் சிறந்தோராவர்.

இந்நாள்வரையும் உள்ள சிறந்த தமிழ்இலக்கியங்களெல்லாம்வகுத்துப் பார்ப்பின் சைவச் சார்புடையன மிக்கிருக்குமென்பது தடையின்றி ஏற்றுக்கொள்ளத்தக்க துணிபேயாம்.

தமிழும் சைவமும் நம் நாட்டுக்கு உடலும் உயிரும் போன்று ஒன்றை ஒன்று இன்றியமையாதவையா யிருக்கின்றன.

*கவியால் யாக்கப்படுவதுயாது? அது காவியம். இதனைவட நூலார் தத்திதாந்த பதம் என்பர். இது தமிழில் காப்பியமென்றாகும். இச்சொல் காரணங்கருதியபொழுது பொதுவாக எல்லா நூல்களையும், காரணம் கருதாதபொழுது இடுகுறியளவாய்ப் பொருட்டொடர் நிலைச் செய்யுள்களையும் குறித்துவரும் காரண இடுகுறியாம். இதுகருதியே சிறுகாப்பியம் என்ற அளவிலே நிறுத்தாது வளைகோட்டிற்குள் (பிரபந்தம்) என்று எழுதியுள்ளேன்.

உ
சிவமயம்

# அப்பர் தேவாரம் அரும்பொருளகராதி

[பத்திராசிரியர்]

[**குறிப்பு:**—இவ்வகராதியில் பற்பல அரும்பொருள்கள் தொகுக்கப்பட்டுள்ளன. விரிவஞ்சிப் பற்பல குறிப்புக்களும் பொருள்களும் விடப்பட்டன. சில பொருள்களுக்கு மட்டும் எல்லாப் பதிகக் குறிப்புகளும் ஏனைய பலவற்றிற்குச் சிற்சில குறிப்புக்களும் தரப்பட்டுள்ளன. பொதுவாக நான்காம் திருமுறையில் கவிச்சுவை நிரம்பிய பாசுரங்களும் ஐந்தாம் திருமுறையில் உபதேசம் நிரம்பிய பாசுரங்களும், ஆறும் திருமுறையில் இறைவன் தன்மை, அருளும் வகை, வரலாறுகள் முதலியன நிரம்பிய பாசுரங்களும் உள்ளனவென்று கூறலாம். சாதாரணமாகப் பலராலும் பாடப்பெற்றும், சொற்பொழிவுகளில் கையாளப்பெற்றும் வரும் பல பாசுரங்கள் இவ்வகராதியில் அக்காரணம் பற்றியே சேர்க்கப்படவில்லை. இவ்வகராதியில் திருத்தங்கள் செய்யவேண்டி யிருப்பின் அன்பர்கள் தெரிவிக்கவும். இவ் வகராதியை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொருவரும் பெருக்கிக்கொள்ள வேண்டும். இவ்வகராதியில் ஒவ்வொரு குறிப்பிலும் மூன்று எண்கள் தரப்பட்டுள்ளன. அவை முறையே திருமுறை எண், பதிக எண், பாசுர எண் ஆகும். உதாரணமாக அகச்சமயிகள் என்ற குறிப்புக்கு 4. 20. 3. என்று தரப்பட்டுள்ளது. அதாவது நான்காம் திருமுறையில் இருபதாம் பதிகத்துள் மூன்றும் பாசுரம் ஆகும்.]

அகச்சமயிகள்

உருத்திர பல்கணத்தார் விரிசடை விரதிகள் அந்த
ணர் சைவர் பாசுபதர் கபாலிகள் தெருவினிற்
பொலியுந் திருவாரூர் ... 4. 20. 3

அகச்சான்று—ஆவணத்தால் ஆட்கொண்டது

ஆவணத்தால் என்றன்னை ஆட்கொண்டான்காண் ... 6. 24. 3



அகச்சான்று—இடபம் பொறிக்க விண்ணப்பம்

இடபம் பொறித்தென்னை என்றுகொள்ளாய் ... 4. 109. 10

" —இறைவன் வாவென்றது

உன்னிஉன்னி உறங்குகின் றேனுக்குத்,தன்னை வாய்
மூர்த் தலைவனு மாசொல்லி, என்னை வாவென்று
போனார் ... 5. 50. 2

எங்கே என்னை இருந்திடம் தேடிக்கொண், டங்கேவந்
தடையாளம் அருளினார்,தெங்கே தோன்றும் திரு
வாய்மூர்ச் செல்வனார், அங்கே வாவென்று போனார்
அதென்கொலோ ... 5. 50. 1

" —ஐயாறடைந்த வகை

யாதும் **சுவடு படாமல்** ஐயாறடைகின்ற போது ... 4. 3. 1

" —கதவைத் திறப்பித்தது

கண்ணினால் உமைக் காணக் கதவினைத் திண்ண
மாகத் திறந்தருள் செய்ம்மினே ... 5. 10. 1

திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ் உறைப்புப்
பாடி அடைப்பித்தா ருங்கின்றார் ... 5. 50. 8

இரக்க மொன்றிலீர் எம்பெரு மானிரே...சரக்க இக்
கத வந்திறப் பிம்மினே ... 5. 10. 11

" —கயிலை சென்றது

காடொடு நாடு மலையும் கைதொழு தாடா வருவேன் 4. 3. 5

" —கல் மிதந்தது

கல்லி னோடெனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடிஅரன்
நல்ல நாமம் நவிற்றிஉய்ந் தேன் அன்றே ... 5. 72. 7

கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் ... 4. 11. 1

" —சமணர் அழிவெய்தியது

வாயிருந் தமிழேபடித் தாளுறு
ஆயிரம் சமணும் அழிவாக்கினார் ... 5. 58. 9

" —சமணர் மறைத்த இலிங்கம் வெளிப்பட்டது

தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையருள்
நிலையி னான்மறைத் தான்மறைக் கொண்ணுமே ... 5. 58. 1

அகச்சான்று—சிவபூசை செய்தது

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் ... 4. 1. 6
என்போலிகள் பறித்திட்ட இலையும் முகையுமெல்லாம் அம்போதெனக் கொள்ளும் ஐயன் ... 4. 92. 10

,, —சூலம் பொறிக்க விண்ணப்பம்

மின்னாரு மூவிலைச் சூலம் என்மேல் பொறி ... 4. 109. 1

,, —சூலை

சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர் ...4. 1. (3,4)
உடலுள் உறு சூலை தவிர்த்தருளாய் ... 4. 1. 6
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர் ... 4. 1. 7
பிணிகாட்டி ஆட்கொண்டு பிணிதீர்த்த ஆரூரர் ... 4. 5. 3
ஊனத்தை நீக்கி உலகறிய என்னை யாட்கொண்டவன் ... 4. 80. 6
உறுபிணியார்...ஓடிப்போனார் ... 6. 98. 5

,, —திருவடி சூட்டக் கேட்டது

பூவார் அடிச்சுவடு என்மேற் பொறித்துவை ... 4. 96. 1

,, —திருவடி சூட்டப்பெற்றது

காலனை வீழச் செற்ற கழலடி இரண்டும் வந்தென் மேலவாய் இருக்கப் பெற்றேன் ... 4. 37. 1
நனைந்தனைய திருவடி என்தலைமேல் வைத்தார் நல்லூரெம் பெருமானார் 6. 14. (1—11)
அடியேனை ஆளாக் கொண்டு தன்னுடைய திருவடி என்தலைமேல் வைத்த தீங்கரும்பை ... 6. 68. 4

,, —திருவடி முத்தி எய்தியது

உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே 6. 99. (1—10)

,, —நஞ்சுண்டது

வஞ்சனை பாற்சோறாக்கி வழக்கிலா அமணர் தந்த நஞ்சமுது ஆக்குவித்தார் ... 4. 70. 5

,, —நீற்றறை குளிர்ந்தது

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்



மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே ... 5. 90. 1

அகச்சான்று—படிக்காசு பெற்றது

பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு வாடி வாட்டம் தவிர்ப்பார் ... 5. 50. 7

,, —வயது முதிர்ந்தவர்

வெண்மயிர் விரவி மேலும் மூளக்கின்ற வினையைப் போக முயல்கிலேன் ... 4. 78. 8
கோதைநல்லார் தங்களோ டின்பம் எய்த இளையனுமல்லேன் ... 4. 78. 9

அகத்துறைப் பகுதிகள்

வனபவள (பதிகம் முழுமையும்) 4. 6. (1—10)
சொன்மாலை ,, 4. 12. (1—10)
அட்டுமினில் ,, 4. 97. (1—10)
நிறைக்கவாலிய ,, 5. 29. (1—10)
வண்ணமும் ,, 5. 40. (1—10)
மாதியன்று ,, 5. 45. (1—10)
கோணன்மாமதி ,, 5. 53. (1—12)
வண்ணங்கள் ,, 6. 9. (1—10)
கொடிமாட ,, 6. 13. (1—10)
5. 7. 6—8, 5. 46. 1—5, 5. 88. 4—9, 6. 25. 7 (முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்), 6. 35. 1—7, 6. 45. 1, 4—8, 6. 58. 3—7

அகப் பூசை

காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே ... 4. 76. 4
சிந்தை வெள்ளப் புனலாட்டிச் செஞ்சொன் மாலை அடிச்சேர்த்தி எந்தை பெம்மான் என்னம்மான் என்பார் பாவ நாசமே ... 4. 15. 11

அஞ்சாமை

உடையார் ஒருவர் தமர்நாம் அஞ்சுவ தியாதொன்றுமில்லை அஞ்ச வருவது மில்லை 4. 2. (1—10)

மண்பாதலம் புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர் வீழினும் அஞ்
சல் நெஞ்சே ... 4. 94. 9
வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென்...ஊன
மொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே 4. 112. 8
தப்பி வானம் தரணி கம்பிக்கிலென் அப்ப னார்உளார்
அஞ்சுவ தென்னுக்கே ... 5. 77. 6
நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்...அடி
யிணையே குறுகி னோமே ... 6. 98. 1
பாராண்டு பகடேறி வருவார் சொல்லும் பணிகேட்கக்
கடவோமோ ... 6. 98. 3
நாவலந்தீ வகத்தினுக்கு நாதரான காவலரே ஏவி
விடுத்தா ரேனும் கடவமலோம் ... 6. 98. 6

## அடியார் கூட்டுறவும் பணியும்

தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் 4. 101. (1—10)
பரவுமின் பணிமின் பணிவாரொடே விரவுமின் விர
வாரை விடுமினே ... 5. 43. 5

## அப்பர் அன்பின் பெருமை

இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழு
தும் ... 4. 1. 1
நினையா தொருபோதும் இருந்தறியேன் ... 4. 1. 2
சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
உன்னாமம் என்நாவில் மறந்தறியேன் ... 4. 1. 6
அளவுபடாத தொரன்போடையா றடைகின்றபோது,
இளமண நாகுதழுவி ஏறு வருவன கண்டேன்... 4. 3. 11
அழலார் வண்ணத் தம்மானை அன்பில் அணைத்து
வைத்தேனே ... 4. 15. 7
வானோர் பெருமானை விருப்பால் விழுங்கியிட்டேனே 4. 15. 8
எண்ணித் தம்மை நினைந்திருந் தேனுக்கு அண்ணித்
திட்டு அமுதூறும் என்னாவுக்கே ... 5. 17. 2

## அப்பர் சமணராயிருந்தமை

குண்டனாய்த் தலைபறித்துக் குவிமுலையார் நகை
நாணாதுழிதர் வேனை ... 4. 5. 4
பல்லுரைச் சமணரோடே பலபல காலமெல்லாம்
சொல்லிய செலவு செய்தேன் ... 4. 39. 7



திருந்தா அமணர்தம் தீநெறிபட்டுத் திகைத்து முத்தி
தரும், தாளிணைக்கே சரணம் புகுந்தேன் ...4. 94. 10
ஓதுவித்தாய் முன்னற வுரைகாட்டி அமணரொடே
காதுவித்தாய் ... 4. 99. 1
பண்ணிய சாத்திரப் பேய்கள் பறிதலைக் குண்டரை
விட்டு எண்ணில் புகழ் ஈசன்தன் அருள்பெற் றேற்
கும் ... 4. 101. 7
குண்டாக்கனாய் உழன்று கையில் உண்டு...அமணே
நின்றார் சொற்கேட்டு உடனாகி யுழிதந்தேன்...
ஏழையேன் நான்பண் டிகழ்ந்தவாறே 6. 3. 7 (1—11)
அறந்தெரியா ஊத்தைவாய் அறிவில் சிந்தை யாரம்
பக் குண்டரோ டயர்த்துநாளும், மறந்து மரன்திரு
வடிகள் நினையமாட்டா மதியிலியேன் வாழ்வெலாம்
வாளா மண்மேற், பிறந்தநாள் நாளல்ல வாளா
ஈசன்பேர் பிதற்றிச் சீரடிமைத் திறத்து ளன்பு
செறிந், தெறும்பி யூர்மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ் சுடரைச் சென்றடையப் பெற்றேன்
நானே ... 6. 91. 8

## அப்பருக்கு மனைவாழ்க்கை யுண்டா? (இல்லையென்பது மரபு. உண்டென்பார் கூறும் சான்றுகள் கீழ் வருவன)

உயர்ந்தேன் **மனைவாழ்க்கை**யும் ஒண்பொருளும் ஒரு
வர் தலைகாவல் இலாமையினால் ... 4. 1. 7
வலித்தேன் **மனைவாழ்க்கை** மகிழ்ந் தடியேன் ... 4. 1. 8
**தீவினைச் சுற்ற**மென்னும் பொருளுளே அழுந்தி
நாளும் போவதோர் நெறியும் காணேன் ... 4. 26. 4
கழித்திலேன் **காமவெந்நோய் காதன்மை** என்னும்
பாசம் ஒழித்திலேன் ... 4. 26. 7
பஞ்சின் **மெல்லடியினார்கள் பாங்கராய்** அவர்கள்
நின்று நெஞ்சில் நோய்பலவும் செய்து நினையினும்
நினையவொட்டார் ... 4. 52. 3
**தாழ்குழல் இன்சொல்** நல்லார் தங்களைத் தஞ்ச
மென்று ஏழையே னாகிநாளும் என்செய்கேன்... 4. 52. 5
**இலவினார் மாதர்பாலே** இசைந்து நான் இருந்து
பின்னும் நிலவுநாள் பல வென்றெண்ணி ... 4. 54. 6
**மானுலா மழைக்கணார்தம்** வாழ்க்கையை மெய்
யென்று எண்ணி நானெலா மினையகால நண்ணி
லேன் ... 4. 67. 6

பாலனாய்க் கழிந்தநாளும் **பனிமலர்க் கோதைமார் தம் மேலனாய்க்** கழிந்தநாளும் ... 4. 67. 9
**மணத்திடை ஆட்டம்பேசி** மக்களே சுற்றமென்னும் கணத்திடை ஆட்டப்பட்டு காதலால் உன்னைப் பேணும் குணத்திடை வாழமாட்டேன் ... 4. 69. 9
**தளையவிழ் கோதைநல்லார்** தங்களோடு இன்பம் எய்த இளையனும் அல்லேன் ... 4. 78. 9
**மக்களே மணந்ததாரம்** அவ்வயிற்றவரை ஓம்பும் சிக்குளே அழுந்தி ஈசன் திறம்படேன் ... 4. 79. 2
**சுற்றமும் துணைநன் மடவாளொடு** பெற்ற மக்களும் பேணல் ஒழிந்தனர் ... 5. 70. 2
**எழுதுபாவை நல்லார் திறம்விட்டு** நான்தொழுது போற்றி நின்றேனையும் ... 5. 90. 8
**வாராண்ட கொங்கையர் மனையில்** சேரோம் ... 6. 98. 3

அறுகயிறூசல்

பிறைபுல்கு சடையாய்ப் பாதத் **தறுகயி றூசலா** னேன் ... 4. 26. 6

அன்பிலாதவர்கட்கு நரகமுண்டு

இரப்பவர்க் கீயவைத்தார் ஈபவர்க் கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்... 4. 38. 10

அன்பில்லாத வழிபாடு

கங்கையாடிலென் காவிரி யாடிலென்... ... 5. 99. 2
வேதம் ஓதிலென் வேள்விகள் செய்யிலென்... ... 5. 99. 4
நன்று நோற்கிலென் பட்டினியாகிலென்... ... 5. 99. 8
கோடிதீர்த்தங் கலந்து குளித்தவை ஆடினாலும் ... 5. 99. 9
எரிபெருக்குவர் அவ்வெரி ஈசன துருவருக்கமதாவ துணர்கிலார் ... 5. 100. 7
கோலும் புல்லும் ஒருகையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயரமுற் றென்பயன்
நீல மாமயிலாடு துறையனே
நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந் தோர்கட்கே ... 5. 39. 8

அன்பே பாசம்

அன்பெனும் பாசம் வைத்தார் ... 4. 30. 3



அன்பே பொருள்

துன்பிலாத் தொண்டர்கூடித் தொழுதழு தாடிப் பாடும் அன்பலாற் பொருளுமில்லை ஐயன் ஐயாறனார்க்கே ... 4. 40. 6

அன்பை அளத்தல்

வேட்கையாற் பரவுந்தொண்டர் அடிமையை அளப்பர்போலும் ... 4. 56. 5
விளக்கும் வேறுபடப் பிறர் உள்ளத்தில் அளக்கும் தன்னடியார் மனத்து அன்பினை ... 5. 21. 6

அஷ்ட குணங்கள் (கடவுள் எண் குணத்தார் பார்க்க.)

அஷ்ட புஷ்பம் (எண்வகை மலர் பார்க்க.)

அஷ்டமூர்த்தம்

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எறியுங் காற்றுமாகி, அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமா யட்டமூர்த்தியாகி ... 6. 94. 1
... 4. 57. 3
அட்டமா உருவினானே 5. 5. (1—6)
அட்டமூர்த்தி அண்ணாமலை கைதொழ
எட்டு மூர்த்தியாய் நின்று இயலும் தொழில் ... 5. 89. 8
ஞாயிறாய் நமனுமாகி வருணனாய்ச் சோமனாகி தீயருநிருதிவாயு திப்பிய சாந்தனாகி ... 4. 32. 6
ஆதித்தன் அங்கிசோமன் அயனொடு மால்புதனும் போதித்து நின்று உலகில் போற்றிசைத்தார் இவர்கள் ... 4. 36. 7
நீருமாய்த் தீயுமாகி நிலனுமாய் விசும்புமாகி ஏறுடைக் கதிர்களாகி இமையவர் இறைஞ்ச நின்று ... 4. 54. 8

அஷ்ட வீரட்டம்

அதிகை, கடவூர், கண்டி, குறுக்கை, கோத்திட்டை, கோவல், பறியல், வழுவை ... 6. 71. 2

ஆதிரைப் பூ சூடுதல்

ஆதிரை நாற்றஞ் சூடுவர் நன்னறுந் திங்களார் ... 5. 12. 2

ஆமையின் துயரம்

உலையை ஏற்றித் தழலெரி மடுத்த நீரில் திளைத்து நின்றாடுகின்ற **ஆமைபோல்** தெளிவிலாதேன் ... 4. 79. 6

**இடபக்கோடி**

கொடியார் இடபத்தர் ... 6. 17. 6

**இயற்கை வர்ணனைகள் சில**

4. 55. (2, 7, 8)
4. 104. 2
6. 76. (3, 4)

**இளங்கோயில்**

தோற்றும் கோயிலும் தோன்றிய கோயிலும்...... **இளங்கோயிலே** ... 5. 11. 1

**ஈகை அருள்**

இரப்பவர்க்கு ஈயவைத்தார் ஈபவர்க்கு அருளும் வைத்தார் ... 4. 38. 10

**உடம்பின் பயன்**

மெய்யுளே விளக்கை யேற்றி வேண்டள வுயரத் தூண்டி உய்வதோர் உபாயம்பற்றி உகக்கின்றேன்... 4. 54. 9

வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்... தில்லையம்பலத்துக் கூத்தனுக் காட்பட்டிருப்ப தன்றோ நந்தங் கூழைமையே ... 4. 81. 5

குறைவிலோம் கொடுமானுட வாழ்க்கையால்...இறைவன்நீள் கழல்ஏத்தி இருக்கிலே ... 5. 39. 5

உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக, மடம்படும் உணர்நெய் யட்டி உயிரெனுந் திரிமயக்கி, இடம்படு ஞானத் தீயால் எரிகொளஇருந்து நோக்கில் கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே ... 4. 75. 4

குனித்த புருவமும்...எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே. ... 4. 81. 4

உடலெனும் இடிஞ்சில் தன்னில் நெய்யமர் திரியுமாகி நெஞ்சத்துள் விளக்குமாகிச் செய்யவர் கரிய கண்டர் ... 4. 29. 2

பொள்ளிலிக் காயம் தன்னுள் புண்டரிகத் திருந்த வள்ளலை ... 4. 42. 6

திருவங்கமாலை 4. 9. (1—12)



**உமையொருபாகர்**

கற்றார் பயில்கடல் நாகைக் காரோணத்தெங் கண்ணுதலே, விற்றாங் கியகரம் வேல் நெடுங்கண்ணி வியன்கரமே, நற்றாள் நெடுஞ்சிலை நாண்வலித்தகர நின்கரமே, செற்றார் புரஞ்சென்ற சேவகம் என்னைகொல் செப்புமினே ... 4. 103. 2

ஒருடம் பிருவராகி...பரமமூர்த்தி ... 4. 22. 6

குங்குமத்தின் மேனி அவன்நிறமே ... 4. 6. 3

சுரிபுரி குழலியோடும் துணையலால் இருக்கையில்லை 4. 40. 3

உமையலா துருவமில்லை ... 4. 40. 9

பெருந்திரு இமவான் பெற்ற பெண்கொடி பிரிந்த பின்னை, வருந்துவான் தவங்கள்செய்ய மாமணம் புணர்ந்து மன்னும், அருந்திரு மேனிதன்பால் அங்கொருபாகமாகத், திருந்திட வைத்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே ... 4. 73. 1

அரிதரு கண்ணியாளை ஒருபாகமாக அருள்காரணத்தில் வருவார் ... 4. 8. 2

கொன்றை துன்றுசடைபாக மாதர் குழல்பாகமாக வருவர் ... 4. 8. 10

ஒன்றரைக் கண்ணன் கண்டீர் ஒற்றியூர் உறை உத்தமனே ... 4. 86. 7

இலங்கு பொற்றோடும் விலைபெறு சங்கக் குழைமையும் 4. 2. 7

புதுவிரி பொன்செய் வோலையொரு காதொர் காது சுரி சங்க நின்றுபுரள ... 4. 8. 10

ஆழிவளைக் கையினானும் ... 4. 4. 5

பாதித்தன் திருவுருவில் பெண்கொண்டானை ... 6. 26. 1

**உள்ளொளி**

தெள்ளத் தேறித் தெளிந்து தித்திப்பதோர்
உள்ளத் தேறல் **அமுதவொளி வெளி**
கள்ளத் தேன்கடி யேன்கவ லைக்கடல்
வெள்ளத் தேனுக் கெவ்வாறு விளைந்ததே ... 5. 91. 9

**உறக்கத்திலும் கடவுள் நினைவு**

அஞ்சும் போதும் துயிலின்றி ஏத்துவார் ... 5. 9. 6

உன்னிஉன்னி உறங்கு கின்றேனுக்குத் தன்னை வாய் மூர்த்தலை வனமா சொல்லி ... 5. 50. 2

சிட்டனைத் திருவால வாயிற்கண்டேன் தேவனைக் கனவில் நான்கண்ட வாறே ... 6. 97. 6

எண்குணங்களுள் நிற்றல்

தென்திசைக்கோன் தானே வந்து கோவாடிக்குற்றே வல் செய்கென்றாலும் குணமாகக் கொள்ளோம் எண்குணத்துளோமே ... 6. 98. 10

எண்வகை மலர்

உரைசெய்நூல் வழி ஒண்மலர் எட்டிடத் திரைகள் போல்வரு வல்வினை தீர்ப்பரால் ... 5. 54. 7
(பதிகம் முழுமையும்)

ஏகாந்த வழிபாடு

கடவுளைக் காதலாலே எல்லியும் பகலும் உள்ளே ஏகாந்தமாக ஏத்தும் ... 4. 41. 3

ஐந்தெழுத்தின் பெருமை

ஆலைப்படுகரும்பின் சாறுபோல அண்ணிக்கும் அஞ்செழுத்தின் நாமத்தான்காண் ... 6. 52. 2
நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின்று ஏத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே ... 5. 90. 2
அருந்தவந்தரும் அஞ்செழுத்தோதினால் பொருந்து நோய்பிணி போகத் துறப்பதோர் மருந்துமாகுவர் 5. 60. 4
துஞ்சும் போழ்து நின்னுமத் திருவெழுத்தஞ்சும் தோன்ற அருளும் ... 5. 27. 3
நமச்சிவாய வென்னும் அஞ்செழுத்தும் சாம் அன்று உரைக்கத் தருதிகண்டாய் ... 4. 103. 3
நின்றன் நாமம் உரையாதுயிர் போகப் பெறுவேனா கில் உறுநோய் வந்தெத்தனையு முற்றாலென்னே 6. 47. 3
பஞ்சமந்திரம் ஓதும் பரமனார் ... 5. 11. 3
சிவாயநமவென்று நல்லம் மேவிய நாதன் அடிதொழ வெல்லவந்த வினைப்பகை வீடுமே ... 5. 43. 6
உனதருளால் திருவாய் பொலியச் சிவாயநமவென்று நீறணிந்தேன் தருவாய் சிவகதிநீ ... 4. 94. 6
விக்கி அஞ்செழுத்தும் ஓத்தொழிந்தும்மை மறக்கினும் என்னைக் குறிக்கொண்மினே ... 4. 95. 4



படைக்கலமாக உன்னுமத் தெழுத்தஞ்சென் நாவிற் கொண்டேன் ... 4. 81. 8
வைத்த பொருள் நமக்காம் என்று சொல்லி மனத் தடைத்துச்சித்தமொருக்கிச் சிவாயநமவென்றிருக் கினல்லால்......அத்தன் அருள் பெறலாமோ ... 4. 94. 5
நற்றுணையாவது நமச்சிவாயவே ... 4. 11. 1
நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே ... 4. 11. 2
பாவத்தை நண்ணிநின்றறுப்பது நமச்சிவாயவே ... 4. 11. 3
நாடினேன் நாடிற்று நமச்சிவாயவே ... 4. 11. 7
நல்லகவிளக்கது நமச்சிவாயவே ... 4. 11. 8
மந்திரம் நமச்சிவாய ஆக நீறணியப் பெற்றால் வெந்தறும் வினையும் நோயும் ... 4. 77. 4
வஞ்சனையால் அஞ்செழுத்தும் வழுத்துவார்க்குச் சேயான் ... 6. 50. 4
ஏதுமொன்றும் அறிவிலராயினும், ஓதி அஞ்செழுத்து முணர்வார்கட்குப், பேதமின்றி அவரவர் உள்ளத்தே, மாதுந்தாமும் மகிழ்வர்மாற் பேறரே ... 5. 60. 1

ஐவகையால் நினைத்தல்

ஐவகையால் நினைவார்பால் அமர்ந்து தோன்றும் ... 6. 18. 3

ஓமஞ் செய்தல்

உமையொரு பாகனை ஓமஞ் செய்தும் உணர்மின்கள் உள்ளத்தால் ... 5. 18. 8

ஓலக்கச் சூளைகள்

உந்திநின்றுருன்றன் ஓலக்கச் சூளைகள் வாய்தல் பற்றி ... 4. 99. 10

கடவுளுக்குச் சிந்தையே கோயில்

புந்திவட்டத்திடைப் புக்குநின்றானையும் பொய்யென் பனோ ... 4. 113. 5
சிந்தையுள் சிவமதானார் ... 4. 29. 4
சிந்தையுள் தெளிவுமாகித் தெளிவினுட் சிவமுமாகி 4. 48. 5
நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன் ... 5. 2. 1
மனத்தகத்தான்......தொண்டர் இனத்தகத்தான் ... 6. 8. 5
ஒருவரும் ஈங்கறியாவண்ணம் என் உள்ளத்துள்ளே ஒளித்துவைத்த சிறையானை ... 6. 66. 7
கைதொழுவார் மனம் ஆலயம் ... 4. 17. 8

### கடவுளும் சத்தியும் நிற்குநிலை

மலைமகள் தன்னுடைய பாலனை பால்மதி சூடியை... 4. 88. 1
மனோன்மணியைப் பெற்ற தாயிலானை ... 5. 91. 1

### கடவுளை அறியும்வகை

அருந்தவத்தின் பெருவலியால் அறிவதன்றி ... 6. 91. 10

### கடவுளைக் காட்டும் கண்ணாடி

ஆரூர் இனிதமர்ந்தார் தாம்படிமக்கலம் வேண்டுவ
ரேல் தமிழ் மாலைகளால், நாம் படிமக் கலம்செய்து 4. 102. 3

### கடவுளைத் தேவரும் அறியார்

மலரவன்மால் எண்வசுக்கள் ஏகாதசர்கள் இரைக்கும்
அமிர்தர்க் கரியவொண்ணான் ... 4. 99. 5
அரிஅயன் இந்திரன் சந்திராதித்தர் அமரரெல்லாம்
உரிய நின்கொற்றக் கடைத்தலையார் உணங்காக்
கிடந்தார் ... 4. 99. 7

### கடவுளை நினைத்தலின் பயன்

நெஞ்சினால் நினைந்தேன் வினைவெய்தலும் வஞ்ச
ஆறுகள் வற்றின ... 5. 44. 4
பித்தனை...அத்தனை...முத்தினை அடியேனுள் முயற
லும் பத்திவெள்ளம் பரந்தது காண்மினே ... 5. 44. 6

### கடவுளை வழிபடப் பூர்வ புண்ணியம் வேண்டும்

வலம்புரத் தடிகள்தம்மை நான் அடைந்தேத்தப்
பெற்று நல்வினைப்பய னுற்றேனே ... 4. 55. 3
எந்த மாதவம் செய்தனை நெஞ்சமே பந்தம் வீடவை
ஆய பராபரன் அந்தமில் புகழ்ஆரூர் அரநெறி
சிந்தையுள்ளும் சிரத்துளும் தங்கவே ... 5. 7. 2
என்னமாதவம் செய்தனை நெஞ்சமே...மன்னுசோதி
நம்பால் வந்து வைகவே ... 5. 77. 2

### கடவுளை மறவாமை

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்
மனத்தே வழுவா திருக்க வரந்தர வேண்டும் ... 4. 94. 8
வந்துபிறப்பன் பிறந்தால் பிறையணி வார்சடைப்
பிஞ்ஞகன்பேர் மறப்பன் கொலோ ... 4. 113. 8



### கடவுள் அசங்கையர்

அறிவரிய சிந்தையானை அசங்கையனை ... 6. 67. 9

### கடவுள் அந்தம்ஆதி

அந்தமும் ஆதியுமாகி நின்றீர் ... 4. 95. 2
ஆதியும் அறிவுமாகி ... 4. 48. 2
அண்டமார் அமரர் கோமான் ஆதிஎம் அண்ணல் ... 4. 48. 4
ஆதியாய் அந்தமானார் யாவரும் இறைஞ்சி ஏத்த ... 4. 37. 9
முதலும் இறுதியும் தாமே போலும் ... 6. 2. 6
முதலாகி நடுவாகி முடிவானானே ... 6. 4. 3
ஈறும் நடுவும் முதலுமாவார் ... 6. 17. 1

### கடவுள் அருளும் வகை

தெரிபுரி சிந்தையார்க்குத் தெளிவலால் அருளு
மில்லை ... 4. 40. 3
கண்டலா தருளுமில்லை கலந்தபின் பிரிவதில்லை ... 4. 40. 4
உற்றநோய் தீர்ப்பர் போலும் உறுதுணை ஆவர்
போலும்...கற்றவர் பரவிஏத்தக் கலந்துலந் தலந்து
பாடும் அற்றவர்க்கன்பர் போலும் ... 4. 56. 3
அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள் செய்வான் ... 6. 1. 2
கடைக்கண்ணால் மங்கையுமை நோக்கா வென்மேல்
ஊனமது வெல்லா மொழித்தான் தன்னை ... 6. 19. 4
முத்திகாட்டும் ஏணியை இடர்க்கடலுட் சுழிக்கப்
பட்டிங் கிளைக்கின்றேற்கக்கரைக்கே யேற வாங்
கும் தோணியை ... 6. 46. 4

### கடவுள் அவியாக வுள்ளார்

ஆவியாய் அவியுமாகி அருக்கமாய்ப் பெருக்கமாகி ... 4. 32. 7

### கடவுள் அழைத்தால் வருவார்

பன்னாள் அழைத்தால் இவன் எனைப் பன்னாள்
அழைப்பொழியான் என்றெதிர்ப்படுமே ... 4. 112. 9
சாதல் நாள் நாயேனுன்னை எங்குற்றாயென்ற போ
தால் இங்குற்றேனென் கண்டாயே ... 4. 75. 8

### கடவுள் அறுசமயத்திலும் ஒருவரே

மிக்க சமயங்கள் ஆறினுருவாகி நின்ற தழலோன் ... 4. 14. 3
அறுவகைச் சமயம் வைத்தார் ... 4. 30. 5
... 4. 33. 6

சமய மேலாறுமாகித் தானொருசயம்புவாகி ... 4. 45. 5
விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயம் செய்து எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்ற தாகும் ... 4. 60. 9
ஆறொன்றிய சமயங்களின் அவ்வவர்க்கப் பொருள்கள் வேறொன்றிலாதன ... 4. 100. 4
ஆறுசமயத் தவரவரைத் தேற்றும் தகையன தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே யேற்றும் தகையன 4. 100. 7
ஆறு கூர்மையர்க் கச்சமயப் பொருள், ஆறுபோலெம் அகத்துறையாதியே ... 5. 89. 6
வெவ்வேறாய் இருமூன்று சமயமாகிப் புக்கானை எப்பொருட்கும் பொதுவானானை ... 6. 50. 7
சமயமவை ஆறினுக்குந் தலைவன் தான் காண் ... 6. 65. 7
தொண்டர்க்கங்கே அறுசமயமாகி நின்ற திக்கினை ... 6. 68. 5

**கடவுள் அன்பர்க்கெளியர் வஞ்சர்க்கரியர்**

கரவாடும் வன்னெஞ்சர்க்கரியானைக் கரவார்பால் விரவாடும் பெருமானை ... 4. 7. 1
சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கலால் நலமிலன் நாடொறும் நல்குவான் நலன் ... 4. 11. 6
மெய்யர் மெய்ந்நின்றவர்க்கு அல்லாதவர்க்கு என்றும் பொய்யர் ... 4. 16. 1
திருந்தாமனமுடையார் திறத்து என்றும் பொருந்தார் ... 4. 16. 3
எளியவர் அடியார்க் கென்றும் இன்னம்பர் ஈசனாரே 4. 72. 5
கள்ளமுள்ள மனத்தவர் காண்கிலார் ... 5. 80. 6
உள்ளம் உள்கலந்தேத்த வல்லார்க்கலால் கள்ளமுள்ள வழிக்கசிவானலன் ... 5. 82. 4
கல்லாதார் காட்சிக்கரியார் போலும் கற்றவர்கள் ஏதங் களைவார் போலும் ... 6. 89. 7
கல்லாதார் காட்சிக்கரியாய் போற்றி கற்றாரிடும்பை களைவாய் போற்றி ... 6. 5. 1
காண்டற்கரிய கடவுள் கண்டாய் கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய் ... 6. 23. 1
வஞ்சனையால் அஞ்செழுத்தும் வழுத்துவார்க்குச் சேயானை ... 6. 50. 4
நேசன்காண் நேசர்க்கு நேசந்தன் பாலில்லாத நெஞ்சத்து நீசர்தம்மைக் கூசன்காண் கூசாதார் நெஞ்சு தஞ்சே குடிகொண்ட குழகன்காண் ... 6. 65. 2



**கடவுள் அன்பர் பாரம்பூண்பர்**

தமக்கன்புபட்டவர் பாரமும் பூண்பர் ... 4. 17. 2

**கடவுள் ஆகாசமூர்த்தி** ... 6. 15. 4

**கடவுள் ஆகாய மந்திரம்**

அஞ்சும் அடக்கியங்கே ஆகாய மந்திரமுமானான் ... 6. 15. 11

**கடவுள் ஆண் பெண் அலி**

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும் ... 6. 18. 2
பெண்ணானை ஆணானைப் பேடியானை ... 6. 22. 2
பெண்ணவனை ஆணவனைப் பேடானானை ... 6. 60. 6

**கடவுள் ஆதிரைநாள் உகந்தார்**

ஆலத்தானும் ஆதிரை நாளானும் ... 6. 15. 7
ஆதிரைநாளுகந்தானும் ஆரூரமர்ந்த அம்மானே ... 4. 4. 6
ஆதிரைநாள் ஆதரித்த அம்மான்றன்னை ... 6. 79. 1
ஆதிரைநாளாய் அமர்ந்தார் போலும் ... 6. 21. 6

**கடவுள் ஆத்மபந்து**

சிந்தையால் நினைவார்களைச் சிக்கெனப் பந்துவாக்கி உயக்கொளும் காண்மினே ... 5. 71. 9

**கடவுள் ஆராவமுது**

வேதிகுடி ஐயனை ஆராஅமுதினை ... 4.90.(1-6)

**கடவுள் ஆரியமுந் தமிழும் ஆவார்**

ஆரியந் தமிழோடிசையானவன் ... 5. 18. 3
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் அண்ணாமலையுறைஎம் அண்ணல் கண்டாய் ... 6. 23. 5
முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய் ... 6. 23. 9
நீலமிடற்றான் றன்னைச் செந்தமிழோடாரியனைச் சீரியானை ... 6. 46. 10
வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன்காண் ... 6. 87. 1

**கடவுள் ஆனையார்**

வெள்ளி மால்வரைபோல்வதோர் ஆனையார் 5. 37. 2. (2—11)

**கடவுள் இம்மை மறுமை வீடாவார்**

சேயவுலகமும் செல்சார்வும் ஆனானை ... 4. 19. 3
மறுமையும் இம்மையாவார் ... 4. 33. 3
போவதோர் நெறியுமானார் ... 4. 36. 2
மண் பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும் விண் பொருந்து தேவர்க்கும் வீடு பேறாய் நின்றானை ... 4. 12. 5

**கடவுள் இயக்குபவர்**

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே...காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே ... 6. 95. 3

**கடவுள் இனியர்**

என்னிலாரும் எனக்கினியாரில்லை என்னிலும் இனியான் ஒருவன் உளன் ... 5. 21. 1
கனியினுங் கட்டி பட்ட கரும்பினும்
பனிமலர்க்குழற் பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்தாளும் அரசினும்
இனியன் தன்னடைந்தார்க் கிடைமருதனே ... 5. 14. 10
மனிதர்காளிங்கேவம் மொன்று சொல்லுகேன்
கனிதந்தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசனெனுங்கனி
இனிது சாலவும் ஏசற்றவர்கட்கே ... 5. 91. 7

**கடவுள் இன்பர் துன்பிலார்**

இன்பன்காண் துன்பங்களில்லாதான்காண் ... 6. 48. 3

**கடவுள் உடையார் ஆண்டார்**

என்னையும் உடையார் போலும் ... 4. 72. 2
என்னை ஆண்டானை அறிவரிய சிந்தையானை ... 6. 67. 9

**கடவுள் உருவை யறிதல் முடியாது**

இன்ன உருவென்றறி வொண்ணாதான்காண் ... 6. 49. 8

**கடவுள் உலகில் நிற்கும் வகை**

பாலின் நெய்யர்...விறகிடைத்தீயர் ... 4. 64. 5
விறகிற்றீயினன் பாலிற்படு நெய்போல் மறைய நின்றுளன் ... 5. 90. 10



**கடவுள் உள்ளத்தில் உறுதி காட்டுவார்**

உள்ளத்தின் உள்ளிருந்து அங்கு உறுதி காட்டி ... 4. 5. 6

**கடவுள் உள்ளே யிருக்கும் வகை**

உள்ளத்தே நிற்றியேனும் உயிர்ப்புளே வருதியேனும் கள்ளத்தே நிற்றியம்மா எங்ஙனம் காணுமாறே ... 4. 76. 7

**கடவுள் எண்குணத்தார்**

எட்டுக் கொலாமவர் ஈறில் பெருங்குணம் ... 4. 18. 8
கலைஞானிகள் காதல் எண்குணவன்காண் ... 5. 63. 4
எட்டுவான் குணத்து ஈசன் எம்மான் ... 5. 89. 8
பரமர் போலும் எண்குணத்தார் ... 6. 16. 4

**கடவுள் எண்ணும் எழுத்துமாவார்**

எண்ணானாய் எழுத்தானாய் எழுத்தினுக்கோர் இயல்பானாய் ... 4. 13. 7
எண்ணும் எழுத்தும் குறியும் அறிபவர் ... 4. 90. 6
எண்ணானாய் எழுத்தானாய் ... 6. 12. 5

**கடவுள் எல்லாக் குணமுமுடையவர்**

எண்ணரும்பல் குணத்தினான்காண் ... 6. 24. 5

**கடவுள் எல்லாங் கடந்தவர்**

விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேத விதியல்லர் விண்ணும் நிலனும், திரிதரு வாயுவல்லர் செறுதீயு மல்லர் தெளிநீரு மல்லர் தெரியில், அரிதருகண்ணி யாளை யொருபாகமாக அருள்காரணத்தில் வருவார் ... 4. 8. 2
ஆணலார் பெண்ணு மல்லார் அதிகைவீரட்டனாரே ... 4. 27. 8
அண்டத் தப்பால் நின்ற பேரொளி ... 6. 1. 10
அண்டத்துக் கப்பாலாய் இப்பாலானே ... 6. 4. 3
அப்பாலைக் கப்பாலைக் கப்பாலானை ... 6. 26. 4
மண்ணல்லை விண்ணல்லை வலயமல்லை மலையல்லை கடலல்லை வாயுவல்லை, எண்ணல்லை எழுத்தல்லை எரியுமல்லை இரவல்லை பகலல்லை யாவுமல்லை, பெண்ணல்லை யாணல்லை பேடுமல்லை பிறிதல்லை யானாயும் பெரியாய் நீயே, உண்ணல்லை நல்லார்க்குத் தீயையல்லை உணர்வரிய ஒற்றியூ ருடைய கோவே 6.;45. 9

## கடவுள் எல்லாமறிந்தவர்

ஓதிற்றொருநூலு மில்லை போலும் உணரப்படாத தொன் றில்லை போலும் ... 6. 21. 2

## கடவுள் எல்லாமாவார்

பூவின்கண் வாசனை மலைநிலநீர் தீவளி ஆகாசமா மீசனை ... 4. 7. 6
சிவநெறி அனைத்து மானார் ... 4. 35. 2
தானலா துலக மில்லை சகமலா தடிமை யில்லை ... 4. 40. 1
பண்ணினார் பாடலாகிப் பழத்தினில் இரதமாகி ... 4. 70. 4
பண்ணி லோசை பழத்தினி லின்சுவை ... 5. 47. 8
தூநெறிக்குத் தூநெறியாய் நின்றான் ... 6. 11. 1
நல்வினையும் தீவினையும் ஆயினானை ... 6. 11. 2
வந்த வரவும் செலவு மானான் ... 6. 16. 9
எல்லாம் சிவனென்ன நின்றாய் போற்றி ... 6. 5. 1
ஓசை ஒலியெலா மானாய் நீயே உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே ... 6. 38. 1
எல்லா உலகமு மானாய் நீயே ... 6. 38. 7
இல்லானை எவ்விடத்தும் உள்ளான் தன்னை ... 6. 11. 3
உலகுக் கெல்லாம் வித்தவன்காண் ... 6. 48. 4
வித்தாம் முளையாகும் வேரே தானும் வேண்டும் உருவமாம் ... 6. 15. 2
நாளாம் கோள்ளும் கிழமையாம் கோளே தானும் ... 6. 15. 1
கூற்றாகிக் கோளு மாகிக் குணமாகி ... 6. 80. 5
காலங்கள் மூன்றானானே ... 6. 4. 4
தோத்திரமும் சாத்திரமும் ஆனார் ... 6. 78. 5

## கடவுள் எழுதவரியர்

ஏவணச் சிலையினானை யாவரே எழுதுவாரே ... 4. 77. 2
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவ னிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே ... 6. 97. 10
இன்ன வுருவென்று அறிவொண்ணா தான்றான் காண் ... 6. 49. 8

## கடவுள் ஐந்தொழில்

ஆக்காதே யாதொன்றும் ஆக்கினானை ... 6. 11. 5
வீச்சின் றி நாறு செய்வான் ... 4. 4. 2
முறைமையால் எல்லாம் படைக்கின்றானே ... 6. 44. 1
கண்ணவனாய் உலகெல்லாங் காக்கின்றானே ... 6. 44. 4



இன்பனாய்த் துன்பம் களைகின்றானே, காத்தவனாய் எல்லாம்தான் காண்கின்றானே கடுவினையேன் தீவினையைக் கண்டு போகத் தீர்த்தவனே ... 6. 44. 1
மம்மாறுக்கும் மருந்து ... 6. 23. 8
விண்ணவனாய் விண்ணவர்க்கும் அருள்செய்வானே 6. 44. 4

## கடவுள் ஒப்பற்றவர்

மற்றாரும் தன்னொப்பா ரில்லாதான் ... 6. 1. 2

## கடவுள் ஓங்காரத்துட்பொருள்

ஓங்காரத் துட்பொருளாய் நின்றான் கண்டாய் ... 6. 39. 10
ஓங்காரத் தொருவன்காண் 6. 48. 4, 6. 65. 1
ஓங்காரத் துட்பொருளை ... 6. 63. 3
ஓங்காரத் தொருவனை ... 6. 80. 4
ஓங்கார மெய்ப்பொருளை ... 6. 86. 3
ஓங்காரன்காண் ... 6. 24. 2
ஓங்காரத் தொருவனாகும் ... 4. 25. 9

## கடவுள் கடமை

தன்கடன்அடி யேனையுந் தாங்குதல் என்கடன்பணி செய்து கிடப்பதே ... 5. 19. 9

## கடவுள் கணக்கெழுதுவர்

தொழுது தூமலர் தூவித் துதித்துநின்
றழுது காமுற் றரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக் கின்னம்பர் ஈசனே ... 5. 21. 8

## கடவுள் கருத்தறிந்து முடிப்பார்

மனத்துள் நின்ற கருத்தானைக் கருத்தறிந்து முடிப் பான் தன்னை ... 6. 19. 8
மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் நீயே ... 6. 38. 3

## கடவுள் கருவிலே யருளுதல்

கருவுற்ற காலத்தே என்னை யாண்டு கழற்போது தந் தளித்த கள்வர் ... 6. 89. 9
கருவுற்ற நாள்முதலாக உன்பாதமே காண்பதற்கு உருகிற்றென் னுள்ளமும் ... 4. 99. 6

## கடவுள் கற்றவர்க்குக் கனி

*கற்றவர்க ளுண்ணுங் கனி* ... 6. 32. 1

## கடவுள் காட்டுமுபகாரம் செய்தல்

*ஞானங் காட்டுவர் நன்னெறி காட்டுவர்* ... 5. 26. 3
*பன்னியசெந் தமிழறியேன் கவியேன் மாட்டேன் எண்ணோடு பண்ணிறைந்த கலைகளாய தன்னையுந் தன் திறத்தறியாப் பொறியி லேனைத் தன்திறமும் அறிவித்து நெறியுங் காட்டி, அன்னையையும் அத்தனையும் போல அன்பாய் அடைந்தேனைத் தொடர்ந்தென்னை யாளாக் கொண்ட, தென்னெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச் செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே* ... 6. 91. 1
*தூநெறிக்கு வழிகாட்டும் தொழிலார் போலும்* ... 6. 89. 1
*காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே* ... 6. 95. 3
*கல்லாதன எல்லாங் கற்பித்தானை காணாதனவெல்லாங் காட்டினானை* ... 6. 43. 1
*பத்தனாய்ப் பணிந்தடியேன் தன்னைப் பன்னாள் பாமாலை பாடப் பயில்வித்தானை* ... 6. 68. 3
*பன்னியநூல் தமிழ்மாலை பாடுவித்து என்சிந்தை மயக்கறுத்த திருஅருளினானை* ... 6. 84. 4

## கடவுள் குருவாய் வருதல்

*கலைஞானங் கல்லாமே கற்பித்தானை* ... 6. 11. 4
*ஆகாச மூர்த்தியாம் ஆனேறேறும் குரவனும்* ... 6. 15. 4
*நிலையான நெய்த்தானனைக் குரவனை* ... 5. 34. 2

## கடவுள் சதுரர்

*சடையிற் கங்கை தரித்த* **சதுரரை** ... 5. 41. 1

## கடவுள் சர்வ சாக்ஷி

*உள்குவார் உள்ளிற்றெல்லாம் உடனிருந் தறிதி* ... 4. 75. 3

## கடவுள் சிரித்த முகமுடையவர்

*தில்லைச்சிற் றம்பலவன்* **சிரித்தமுகங்** *கண்ட கண் கொண்டு மற்றினிக் காண்பதென்னே* ... 4. 80. 7
*குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்* **குமிண் சிரிப்பும்** ... 4. 81. 4



*முடிகொண்ட மத்தமும் முக்கண்ணின் நோக்கும் முறுவலிப்பும்* ... 4. 81. 7
*என்று வந்தாய் என்னும் எம்பெருமான்தன் திருக்குறிப்பே* ... 4. 81. 2

## கடவுள் செல்வர்

*சென்றடையாச் செல்வன் தான்காண் சிவனவன் காண்* ... 6. 87. 1
*ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்* ... 6. 23. 5

## கடவுள் சைவர்

*மான்மறி மழுவொன் றேந்தும் சைவனே* ... 4. 62. 4
*சதுரநடம் ஆட்டுகந்த சைவர் போலும்* ... 6. 75. 9

## கடவுள் சொற்பொருள் போல்வர்

*சொல்லானைச் சொல்லார்ந்த பொருளானை* ... 4. 7. 7
*சொல்லாகிச் சொற்பொருளாய் நின்றார் போலும்* ... 6. 28. 6

## கடவுள் சோதனை

*சொல்லுவார் சொல்லெல்லாம் சோதிப்பான்* ... 6. 15. 8

## கடவுள் ஞானக்கடற்கு நாவாய்

*ஞானப் பெருங்கடற்கோர் நாவாயன்ன பூரணன்* ... 6. 8. 3

## கடவுள் ஞானமூர்த்தி

**மூதறிவாளன்** *நோக்கி நிறுவினான் சிறுவிரலால்* ... 4. 39. 10
*அண்டனே அண்டவாணா* **அறிவனே** *அஞ்சல் என்னாய்* ... 4. 67. 2
*காரணக் கலைஞானக் கடவுளே* ... 5. 68. 2
*ஞான மூர்த்தியை நான் மறக்கிற்பனே* ... 5. 93. 5
*நல்லெருதொன் றூர்வான் தன்னை ஞானப்பெருங் கடலை* ... 6. 22. 5

## கடவுள் தத்துவங் கடந்தவர்

*தானன்றி வேறொன்றில்லாத் தத்துவனே* ... 6. 50. 7
*தத்து வந்தலை கண்டறி வாரிலைத்*
*தத்து வந்தலை கண்டவர் கண்டிலர்*
*தத்து வந்தலை நின்றவர்க் கல்லது*
*தத்து வனலன் தண்புக லூரனே* ... 5. 46. 7
**ஐயஞ்சின்** *அப்புறத்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே* ... 4. 4. 10

### கடவுள் தொண்டர் பிழை பொறுப்பார்

*நாயேன் பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தாயன்றே......எம்பெருமான் திருக்கருணை இருந்தவாறே* ... 6. 95. 8
*உன்பால் அன்பர் பிழை பொறுத்தி என்பதுவும் பெரியோய் நின்றன் கடனன்றே பேருள் உன்பாலதன்றே* ... 6. 47. 7
*குறையாத உவகைக் கண்ணீர் ஆராத ஆனந்தத்தடியார் செய்த அனுசாரம் பொறுத்தருளி அவர்மேல் என்றும் சீறாத பெருமானை* ... 6. 80. 5
*அழைக்கும் அன்பினராய அடியவர் பிழைப்பு நீக்குவார்* ... 5. 16. 8
*பழையதம் அடியார் செய்த பாவமும் பிழையும் தீர்ப்பர்* ... 5. 38. 1

### கடவுள் நச்சுவார்க்கினியர்

*இச்சையால் மலர்கள் தூவி இரவொடு பகலும் தம்மை* **நச்சுவார்க்கினியர்** *போலும்* ... 4. 66. 1

### கடவுள் நாமங்கள் சில

*நக்கன்காண்...சொக்கன்காண்* ... 6. 87. 2
*சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி* ... 6. 32. 6
*தற்பரமாய்ச் சதா சிவனாய்த்தானும் யானும் ஆகின்ற தன்மையனை* ... 6. 98. 7
*தருமா போற்றி தத்துவனே போற்றி* ... 6. 5. 10
*கேடிலியைக்கீழ் வேளூர் ஆளுங் கோவை* ... 6. 90. 6
*பராபரன் என்பது தமது பேராக் கொண்டார்* ... 6. 96. 11
*நாதியை நம்பியை நள்ளாற்றானை* ... 6. 20. 1
*அறத்தானை அறவோனை ஐயன் தன்னை* ... 6. 80. 7

### கடவுள் நின்மலர்

*நேரிடும்போர் மிகவல்ல நிமலன் தன்னை நின்மலனை* 6. 91. 5
*நெய்யாடி நின்மலனே நீலகண்டா* ... 6. 99. 8
*அடியேனை யாட்கொண்ட அமலர்தாமே* ... 6. 96. 9
*நின்மலனை வளங்கொண்டு நீளநோக்கி* ... 6. 85. 8
*குழல்மடவாள் பாகம் வைத்த மயானத்து மாசிலா மணியை* ... 6. 91. 3
*சிட்டனைத் திருவாலவாயிற் கண்டேன்* ... 6. 97. 6



### கடவுள் நீதியாவார்

***நீதியை*** *நிறைவைமறை நான்குடன் ஓதியை* ... 5. 2. 6
*நிறைவுடையாய் மறைவல்லாய்* ***நீதியானே*** ... 6. 99. 8
*நெஞ்சுள் நின்று நினைப்பிக்கும்* ***நீதியை*** ... 5. 93. 8
*நிதியை நீதியை நித்திலக் குன்றினை* ... 5. 93. 9
*நீதியானை நியமநெறிகளை ஓதியானை* ... 5. 94. 6

### கடவுள் பசுபதி

*பந்தித்த வல்வினை தீர்க்கவல்லானைப் பசுபதியை* ... 4. 82. 5
*பாம்பலைக்கும் சடையாய் எம்மைஆளும் பசுபதியே* 4.110.1—10
*பழகநான் அடிமை செய்வேன் பசுபதி பாவநாசா* ... 4. 51. 10
*பசுபதியைப் பாசுபத வேடத்தானை* ... 6. 91. 2

### கடவுள் பஞ்சபூதங்களிலிருக்கும் வகை

*எண்ணகத்தில்லை அல்லர் உளரல்லர் இமவான்பெற்ற பெண்ணகத்தரையர் காற்றில் பெருவலியிருவராகி மண்ணகத்தைவர் நீரில் நால்வர் தீயதனில் மூவர் விண்ணகத் தொருவர் வீழிமிழலையுள் விகிர்தனாரே* 4. 64. 6

### கடவுள் பண்பாடல்களை விரும்புவார்

*பண்ணின் இன்மொழி கேட்கும் பரமனை* ... 5. 18. 4
*பண்ணிற் பாடல்கள் பத்திசெய்வித்தற்கு அண்ணித்தாகும் அமுதினை* ... 5. 44. 8
*பாட்டுக்கும் ஆட்டுக்கும் பண்பா போற்றி* ... 6. 5. 2

### கடவுள் பந்தமும் வீடும் அருள்வார்

*உருவமு முயிருமாகி ஓதிய உலகுக்கெல்லாம் பெருவினைப் பிறப்பு வீடாய் நின்ற எம்பெருமான்* ... 4. 63. 3
*எண்திசைக்கும் பந்தமும் வீடும் பரப்புகின்றீர்* ... 4. 95. 2

### கடவுள் பருமை நுட்பம் உடையவர்

*பறியர் நுண்ணியர் பார்த்தற்கரியவர்...தொண்டர்க்கெளியர்* ... 5. 27. 5
*அணுவையார்க்கும் தெரியாத தத்துவனை...பெரியானை* ... 6. 1. 1.
*சிறியையாய்ப் பெரியையாய் நின்ற நாளோ* ... 6. 34. 6

### கடவுள் பல சமயங்களிலும் ஒருவரே

***பரிதியானைப் பல்வேறு சமயங்கள் கருதியானை*** ... 5. 94. 5
***கொண்ட சமயத்தார் தேவனாகி*** ... 6. 15. 3

ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுரு வாய் நிற்கின்ற அருளும் தோன்றும் ... 6. 18. 11

### கடவுள் பாவங்களைப் போக்குவார்

பணிந்தாரன பாவங்கள் பாற்ற வல்லீர் ... 4. 1. 3

### கடவுள் பாவநாசர்

பசுபதி பாவநாசா ... 4. 51. 10

பண்டனங்கற் காய்ந்தானே பாவநாசா ... 6. 99. 5

### கடவுள் பித்தர் முத்தர் சித்தர்

பிச்சன் பிறப்பிலிபேர் நந்தி ... 4. 80. 4

பித்தனைப் பெருங்காடரங்காவுடை முத்தனை முளை வெண் மதிசூடியைச் சித்தனை ... 5. 2. 5

பித்தன்காண்...முத்தன்காண்...சித்தன்காண் ... 6. 87. 4

முத்தனே...சித்தனே ... 5. 13. 4

பித்தர்க்குப் பித்தனாய் நின்றான் தன்னை ... 6. 11. 2

முத்தனை முடிவொன்றிலா மூர்த்தியை...சித்தனைச் சென்று சேருமா செப்புமே ... 5. 40. 8

### கடவுள் பிறப்பு இறப்பு இல்லாதவர்

இறப்பொடு பிறப்பிலானைப் பெரும் பொருட் கிளவி யானை ... 4. 74. 3

பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி ... 4. 80. 4

பெரியார் பிறப்பறுப்பான் என்றும் தன் பிறப்பை அறியான் ... 4. 84. 3

நூறுகோடி பிரமர்கள் நொங்கினார்
ஆறுகோடி நாராயணரங்ஙனே
ஏறுகங்கை மணலெண்ணிலிந்திரர்
ஈறிலாதவன் ஈசனொருவனே ... 5. 100. 3

ஒரு பிறப்பிலானடியை உணர்ந்தும் ... 6. 3. 5

ஆதியும் அந்தமும் ஆனான் கண்டாய் ... 6. 23. 9

பேரொன் றில்லார் பிறப்பிலார் இறப்பிலார் பிணி யொன்றில்லார் ... 6. 10. 8

முதலும் இறுதியுமில்லார் போலும் ... 6. 21. 6

தந்தைதாய் இல்லாதாய் நீயே ... 6. 41. 9

பிறவாதே தோன்றிய பெம்மான் தன்னை ... 6. 11. 1

அளவிலாப்பல்லூழி கண்டு நின்ற தீர்த்தன் ... 6. 19. 11

பிறவாதும் இறவாதும் பெருகினான் ... 6. 74. 6



### கடவுள் புதியர் பழையர்

புதியனவுமாய் மிகவும் பழையான் தன்னை ... 6. 11. 7

பச்சை நிறமுடையர் பாலர்சாலப் பழையர் ... 6. 17. 7

### கடவுள் புராணர் சாரணர்

பூம்புகலூர் மேயபுராணர் போலும் ... 6. 89. 6

பூதங்களாய்ப் புராணன் தானேயாகி ... 6. 94. 10

பூரணன்காண் புண்ணியன்காண் புராணன்காண் ... 6. 8. 3

சாரணன்காண் சந்திரன்காண் ... 6. 8. 3

சாரணன்காண் சார்ந்தார்க்கு இன்னமுதானான்காண் 6. 49. 2

### கடவுள் புனிதர் உத்தமர் புண்ணியர் நாவலர் காவலர் நேசர்

புணர்வரிய பெருமானைப் **புனிதன்** தன்னை ... 6. 92. 1

புகழும் அன்பர்க்கு இன்பமரும் அமுதைத்தேனைப் **புண்ணியனை** ... 6. 91. 4

உருத்திரனை உமாபதியை உலகானானை **உத்தமனை**... 6. 90. 5

**நாவலனைப்**...அனலோன் போற்றும் **காவலனை** ... 6. 90. 1

நேசனை நித்தலும் நினையப்பெற்றோம் ... 6. 98. 8

### கடவுள் பேராயிரம் படைத்தார்

ஆயிரம் பேருகந்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே 4. 4. 8

பூவனூர்ப் புனிதன் திருநாமந்தான் நாவில் நூறு நூறாயிர நண்ணினார் ... 5. 65. 1

எண்ணாயிரம் கோடி பேரார் போலும் ... 6. 21. 8

### கடவுள் போக போக்கியமாவார்

பொன்னானாய் மணியானாய் போகமானாய் ... 6. 95. 7

பழமாகிப் பழத்தில் நின்ற இரதங்கள் நுகர்வானும் தானேயாகி ... 6. 94. 5

அவனருளே கண்ணாகக்காணின் அல்லால் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் எனவெழுதிக் காட்டொணாதே ... 6. 97. 10

### கடவுள் மந்திரமும் தந்திரமுமாவார்

மந்திரமும் தந்திரமும் ஆனார் போலும் ... 6. 16. 1

மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான் ... 6. 54. 8

### கடவுள் மந்திரிப்பார்க்கருளும் வகை

*மந்திரிப்பார் மனத்துளானை* ... 6. 50. 4
" ... 6. 63. 2
" ... 4. 92. 14

### கடவுள் மருந்து

*வானவர்க்கு மருந்தாகிப் பிணிதீர்க்குமணியானே* ... 4. 13. 3

### கடவுள் மறக்கருணை

*துக்கமாமூடர் தம்மை துயரிலே வீழ்ப்பர் போலும்*... 4. 56. 6
*என்போலிகள் உம்மை இனித் தெளியார் அடியார் படுவது இதுவேயாகில்* ... 4. 1. 9

### கடவுள் மூவராய் முதல்வனாய் நிற்றல்

*உன்னை மூவரில் முதல்வன் என்பன்* ... 4. 23. 6
*மூலமாகிய மூவர்க்கும் மூர்த்தியை* ... 5. 57. 5
*மூவர்க்கு முதல்வரானார்* ... 4. 35. 2
*மூவர்க்கு முதல்வன் தன்னை* ... 4. 70. 1
*காலமுநாள்கள் ஊழிபடையாமுன் ஏகவுருவாகி மூவர் உருவில் சாலவுமாகி* ... 4. 14. 3
*மூவராய் முதலாய் நின்ற மூர்த்தியே* ... 5. 36. 5
*உம்பரானை உருத்திரமூர்த்தியை* ... 5. 62. 7
*ஒருருவே மூவுருவமான நாளோ* ... 6. 34. 1
*ஒருருவின் மூவுருவாய் ஒன்றாய் நின்ற விருத்தன்*... 6. 85. 2

### கடவுள் யோகி

*நேரிழையைக் கலந்திருந்தே புலன்களைந்தும் வென்றானை* ... 6. 50. 3
*மான்மறிக்கையர் மங்கையைக் கெழுமின யோகினர்* 4. 10. 5
*பங்கனே பரமயோகி என்றென்றே* ... 4. 26. 1
*பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி* ... 4. 23. 1
*குழல் மடவார் கடைக்கண் நோக்கில் துளங்காத சிந்தையராய் துறந்தோருள்ளப் பெரும் பயனை* ... 6. 1. 7
*பசுஏறி உழிதரும் எம்பரம யோகி* ... 6. 45. 2
*தவநெறிகள் சாதிக்கவல்லான் தன்னை* ... 6. 3. 3
*தவநெறிகள் சாதித்து நின்றாய் போற்றி* ... 6. 5. 4
*கல்லாடை மேற்கொண்ட காபாலிகாண்* ... 6. 8. 6
*கல்லாடை புனைந்தருளும் காபாலியை* ... 6. 92. 2



### கடவுள் வஞ்சரைப் புறக்கணித்தல்

*உருகா மனத்தார்களைப் புறக்கணித்திடும் புத்தூர்ப் புனிதரே* ... 5. 61. 2

### கடவுள் வாட்டம் தீர்ப்பர்

*வாட்டம் தீர்க்கவும் வல்லர் மாற்பேறரே* ... 5. 60. 6
*வாட்டம் தீர்த்திடும் வான்மியூ ரீசனே* ... 5. 82. 9
*வாடிய வாட்டம் தவிர்ப்பான் கண்டாய்* ... 6. 23. 6
*மருளாதார் தம்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்* ... 6. 99. 4

### கடவுள் விரும்பிய உருவொடு அருள்வார்

*ஆரொருவர் உள்குவார் உள்ளத் துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்* ... 6. 18. 11

### கடவுள் விருப்பு வெறுப்பற்றவர்

*வேண்டாமை வேண்டுவது மில்லான் தன்னை* ... 6. 46. 9
*கரைந்து கைதொழுவாரையும் காதலன் வரைந்து வைதெழு வாரையும் வாடலன்* ... 5. 12. 1

### கடவுள் விரைவில் அருள் செய்வர்

*தன்னைநோக்கித் தொழுதெழு வார்க்கெலாம் பின்னை என்னார்* ... 5. 38. 2
*தொடருந் தொண்டரைத் துக்கம் தொடர்ந்துவந் தடரும் போதாநு யருள்செய்பவர்* ... 5. 51. 8
*மழுவலான் திருநாமம் மகிழ்ந்துரைத்து அழவலார்களுக்கு அன்புசெய்து இன்பொடும் வழுவிலா அருள்செய்தவன்* ... 5. 59. 7

### கடவுள் வேண்டியதைக் கொடுப்பார்

*வேண்டுவார் வேண்டுவதே ஈவான்கண்டாய்* ... 6. 23. 1
*அடியார்கள் வேண்டிற்றீயும் விண்ணவனை விண்ணப்பம் கேட்டு நல்கும் செய்யவனை* ... 6. 44. 10
*மெய்யடியார் வேண்டுவதே வேண்டுவானை* ... 6. 80. 3

### கதிரவன் கடவுளல்லன்

*அங்கதிரோனவனை அண்ணலாக் கருதவேண்டா* ... 4. 41. 8

### கவியின்பம் நிரம்பிய பகுதிகள் சில

**நான்காம் திருமுறையுள்** :—10—8, 26—5, 27—2, 45—6, 53—2, 61—3, 75—9, 76—2, 77—1,

77—5, 80—5, 81—3, 86—1, 86—7, 86—8, 86—10, 99—9, 103—2, 103—8, 106—1, 112—1, 113—2, 7, 10

**ஐந்தாம் திருமுறையுள் :—15—6, 30—7**

**ஆறாம் திருமுறையுள் :—97—9**

### காஞ்சி

*கல்வியைக் கரையிலாத* **காஞ்சிமா** *நகர் தன்னுளால்...* 4. 43. 8

### காவிரி

*கைய னைத்துங் கலந்தெழுங்* **காவிரி**
*செய்ய னைத்திலுஞ் சென்றிடுஞ் செம்புனல்*
*கொய்ய னைத்துங் கொணருங் குரக்குக்கா* ... 5. 75. 3
*விட்டு வெள்ளம் விரிந்தெழு காவிரி*
*இட்டநீர் வயலெங்கும் பரந்திடக்*
*கொட்ட மாமுழ வோங்கு குரக்குக்கா* ... 5. 75. 5

### கிரியை

4. 31. 1, 5. 14. 1, 5. 14. 2 *முதலியன*

### குலம்

**குலமிலராகிலும் குலத்துக் கேற்பதோர் நலமிகக்**
**கொடுப்பது நமச்சிவாயவே** ... 4. 11. 6
**குலங்கெடுத்துக்கோள் நீக்கவல்லான் தன்னை** ... 6. 20. 6
*நாசமாய குலநலஞ் சுற்றங்கள்* ... 5. 31. 9
*சாத்திரம் பலபேசும் சழக்கர்காள் கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்* ... 5. 60. 3
*எவரேனுந் தாமாக இலாடத் திட்ட திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி...கவராதே தொழும் அடியார் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே* ... 6. 61. 3
*அங்கமெலாம் குறைந்தழுகு தொழு நோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பாகில் அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே* ... 6. 95. 10

### குறிகளும் அடையாளமும்

**குறிகளும் அடையாளமுங் கோயிலும்**
**நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்**



*அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்*
*பொறியிலீர் மனம் என்கொல் புகாததே* ... 5. 90. 6

### கெடிலம்

*தென்திசை கெங்கைய தெனப்படும்* **கெடிலம்** ... 4. 10. 6

### கொக்கிறகு சென்னி

**கொக்கிறகு சென்னி***யுடையான் கண்டாய்* ... 6. 39. 2

### சந்தியாவந்தனம்

**மூன்று சந்தி தியானித்து** *வணங்கின்று திரிகாலங் கண்ட எந்தை* ... 4. 29. 7

### சமணர் ஒழுக்கங்கள்

*குண்டனாய்த் தலைபறித்து* ... 4. 5. 4
*குவிமுலையார் நகைநாணாது உழிதருவேனை* ... 4. 5. 4
*காவிசேர் கண்மடவார் கண்டோடிக் கதவடைக்கும் கள்வன்* ... 4. 5. 8
*இருகையேற்றிட உண்ட ஏழையேன்* ... 4. 5. 5
*பீலி கையிடுக்கி* ... 4. 39. 2
*தட்டிடு சமணரோடே தருக்கினான் தவமென்றெண்ணி* 4. 39. 3
*பாசிப்பல் மாசுமெய்யர் பலமிலாச் சமணர்* ... 4. 39. 4
*கடுப்பொடி அட்டிமெய்யில் கருதியோர் தவமென்றெண்ணி* ... 4. 39. 5
*குண்டரே சமணர் புத்தர் குறியறியாது நின்று கண்டதே கருதுவார்கள்* ... 4. 42. 9
*அருந்தும்பொழு துரையாடா அமணர்* ... 4. 101. 5
*மூங்கைகள்போல் உண்ணும்மூடர்* ... 4. 101. 6
*பண்ணிய சாத்திரப் பேய்கள்* ... 4. 101. 7
*முடையரைத்தலை முண்டிக்கும் மொட்டரை* ... 5. 58. 4
*மூக்கினால் முரன் றோதிய குண்டிகை தூக்கினார்* ... 5. 58. 2
*மூலை மறைக்கப்பட்டு நீராடாப்பெண்கள் முறைமுறையால் நந்தெய்வம் என்று தீண்டித் தலைபறிக்கும் தன்மையர்கள்* ... 6. 3. 11
*கையெலாம் நெய்பாயக் கழுத்தேகிட்டக் கால்நிமிர்த்து நின்றுண்ணுங்கையர் சொன்ன பொய்யெலாம் மெய்யென்று* ... 6. 11. 9
*கறிவிரவு நெய்சோறு கையிலுண்டு கண்டார்க்குப் பொல்லாத காட்சியானேன்.* ... 6. 3. 8

## சமாதி

சந்தியானைச் **சமாதி** செய்வார் தங்கள் புந்தியானை... 5. 44. 2

## சரியை

பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்த ராகி,
அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை
யுள்ளே வைத்து, விரும்பிநல் விளக்குத் தூபம்
விதியினால் இடவல் லார்க்குக், கரும்பினிற் கட்டி
போல்வார் கடவூர்வீ ரட்ட னாரே ... 4. 31. 4
ஆப்பி நீரோ டலகுகைக் கொண்டிலர்
பூப்பெய் கூடை புனைந்து சுமந்திலர் ... 5. 95. 3
நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே...
அலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்தி... 6. 31. 3

## சாத்தன்

சாத்தனை மகனா வைத்தார் ... 4. 32. 4

## சிவகதி

மெய்ம்மையாம் உழவைச்செய்து......செம்மையுள்
நிற்பராகில் சிவகதி விளையுமன்றே. ... 4. 76. 2
தேறிநீ நினைதியாகில் சிவகதி திண்ணமாகும் ... 4. 77. 7
தருவாய் சிவகதிநீ பாதிரிப்புலியூர் அரனே ... 4. 94. 6
செம்மையாய சிவகதி சேரலாம் ... 5. 43. 8
சிவகதி கூடலாம் திருக்கோளிலி ஈசனைப் பாடுமின் 5. 56. 9

## சிவபெருமான் கூத்துவகைகள்

குடமுழவம் வீணைதாளம் குறுநடைய சிறுபூதம்
முழக்க மாக்கூத்தாடுமே ... 6. 4. 5
நடமாட வல்லானே ஞானக் கூத்தா ... 6. 44. 5
அரங்கிடை நூலறிவாளர் அறியப்படாததோர் கூத்து 4. 2. 6
நாடற் கரியதோர் கூத்து ... 4. 2. 8
ஆடினார் காளிகாண ஆலங்காட் டடிகளாரே ... 4. 68. 8
அரிஅயன் தலைவெட்டி வட்டாடினார் ... 5. 85. 2

## சிவபெருமான் திருமால் பாகன்

மையரிக் கண்ணியாளும் மாலுமோர் பாகமாகி ... 4. 22. 4
மாலுங் கொப்பளித்த பாகர் ... 4. 24. 7
மாலொரு பாகமாக மகிழ்ந்த நெய்த்தான னாரே ... 4. 37. 7



மண்ணினையுண்ட மாயன் தன்னை யோர்பாகங் கொண்
டார் ... 4. 43. 7
அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே ... 4. 40. 5
வெண்பொடியாடும் மேனிப்பாகம் மாலுடையர்போ
லும் ... 4. 66. 8
திருமாலோர் பங்கன்தன்னை ... 4. 78. 7

## சிறு தெய்வம் வேண்டாம்

சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோமல்லோம் சிவ
பெருமான் திருவடியே சேரப்பெற்றோம் ... 6. 98. 5
செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று பத்திசெய்
மனப்பாறைகட் கேறுமோ ... 5. 100. 2

## ஞானம்

ஞானத்தால் தொழுவார் சிலஞானிகள்
ஞானத்தால் தொழுவேனுனை நானலேன்
ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு
ஞானத்தாய் உனைநானுந் தொழுவனே ... 5. 91. 3
முன்னை ஞானமுதல் தனிவித்தினைப்
பின்னை ஞானப் பிறங்கு சடையனை
என்னை **ஞானத் தி**ருளறுத் தாண்டவன்
தன்னை **ஞானத் தளையிட்டு** வைப்பனே ... 5. 91. 2

## தசகாரியம்

பத்துக்கொலா மடியார் செய்கைதானே ... 4. 18. 10

## தமிழின் பயன்

வாயிருந் தமிழே படித்தாளுறு ஆயிரஞ் சமணும்
அழிவாக்கினார் ... 5. 58. 9

## தயாமூல தன்மவழி

**தயாமூல தன்ம**மென்னும் தத்துவத்தின் வழிநின்று
தாழ்ந்தோர்க் கெல்லாம் நலங்கொடுக்கும் நம்பி ... 6. 20. 6
தயாமூல தன்மவழி எனக்கு நல்கி மனம் திருத்துஞ்
மழபாடி வயிரத்தூணே ... 6. 40. 6

## தல வகைகள்

அடைவு திருத்தாண்டகம் ... (6. 71)
பள்ளிகள் 1, வீரட்டங்கள் 2, குடி 3, ஊர் 4, கோயில்
5, காடு 6, வாயில் 7, ஈச்சரம் 8, மலை, 9, ஆறு
குளம் களம் கா 10

தலையாய மனிதர்

ஏகம்பம் மேவினரைத் தலையினால் வணங்க வல்லார் **தலைவர்க்குத் தலைவர்** தாமே ... 4. 44. 3
அனுசயப்பட்டது இது என்னாதே
கனிமனத் தொடுகண் களும்நீர் மல்கிப்
புனித னைப்பூவ னாரனைப் போற்றுவார்
மனிதரில் தலையான மனிதரே ... 5. 65. 6

தில்லைச் சிற்றம்பலம்

ஞாலமாம் தில்லைதன்னுள் நவின்ற சிற்றம்பலத்தே 4. 22. 10
அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற்றம்பலம் ... 5. 1. 1
தூயசெம் பொன்னினால் எழுதிமேய்ந்த சிற்றம்பலம் 5. 2. 8

திருமால் ஓணப்பிரான்

ஓணப்பிரானும் ஒளிர்மா மலர்மிசை உத்தமனும் காணப் பராவியும் காண்கின்றிலர் ...4. 105. 10

திருமால் கருடாரூடர்

**கருடத் தனிப்பாகன்** ... 4. 108. 2

திருவிழாக்கள்—அட்டமி

தீர்த்தமாம் **அட்டமி**முன் சீருடை ஏழுநாளும் கூத்த ராய் வீதி போந்தார் குறுக்கை வீரட்டனாரே ... 4. 50. 2

" —ஆதிரை

வீதிகள்தோறும் வெண்கொடியோடு விதானங்கள் ஆதி ஆரூர் **ஆதிரைநாளால்** அதுவண்ணம் (பதிக முழுமையும்) ... 4. 21. 3

" —உத்திரம்

பாரூர் பறிப்பத்தம் **பங்குனி உத்திரம்** பாற்படுத் தான் ... 4. 102. 2
ஒத்தமைந்த **உத்திரநாள்** தீர்த்தமாக ஒளிதிகழும் ஒற்றியூர் என்கின்றாரே ... 6. 45. 5

" —(மகாமகம்) குடந்தையில் பல தீர்த்தங்கள் கூடுகை

கங்கையாளவள் கன்னி எனப்படும் கொங்கையாள் உறையும் குடமூக்கிலே ... 5. 22. 3





இயமுனை சேதா ஏறுடையான் அமர்ந்தவிடம் கோதாவிரி யுறையும் குடமூக்கிலே ... 5. 22. 4
தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை சரசுவதிபொற் றாமரை புட்கரணி தெண்ணீர்க் கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த குடந்தைக்கீழ்க்கோட் டத்தெங் கூத்தனாரே ... 6. 75. 10

திருவிழாக்கள்

மால்விடைமேல் நெடுவீதி போதக் கொண்டார் ... 6. 96. 7

தொண்டரல்லார்

**இளையகாலம்** எம்மானை அடைகிலாத் **துளையிலாச்** செவித்தொண்டர்காள் ... 5. 66. 3

தொண்டர் ஒளி பெறுவர்

கைதொழ உற்றவர் தாமொளி பெற்றனர் தாமே ... 4. 17. 5

தொண்டர்க்கு அருள்

மெய்யராய் மேனி தன்மேல் விளங்கு வெண்ணீறு பூசி உய்வராய் உள்குவார்கட் குவகைகள் பலவுஞ் செய்து ... 4. 58. 5

தொண்டர்க்கு இம்மையிற் செல்வம்

என்றும் சிந்தை செய்வாரைப் பிரியாதிருக்கும் திரு மங்கையே ... 4. 103. 5
தொண்டராகித் தொடர்ந்து விடாதவர்க் கண்டம் ஆளவும் வைப்பர் ஆரூரரே ... 5. 7. 3
இம்மை வானவர் செல்வம் விளைத்திடும் ... 5. 14. 4
நன்று நாள்தொறும் நம்வினைபோய் அறும் என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம் ... 5. 42. 1
செய்ய பாதம் இரண்டும் நினையவே வையம் ஆளவும் வைப்பர் ... 5. 60. 7
செல்வாய செல்வம் தருவாய் நீயே ... 6. 38. 7
தொழப்படும் தேவர் தொழப்படுவானைத் தொழுத பின்னைத் தொழப்படும் தேவர் தம்மால் தொழு விக்கும் தம்தொண்டரையே ... 4. 112. 5

தொண்டர்க்குத் தேவலோகத்தின்பம் வேண்டா

அண்டர் வாழ்வும் அமரர் இருக்கையும்
கண்டு வீற்றிருக் குங்கருத் தொன்றிலோம் ... 5. 39. 3

தோண்டர்க்கு நரகமில்லை

*தொண்டர்க்குத் தூநெறியாய் நின்றான் தன்னை சூழ்*
*நரகில் வீழாமே காப்பான் தன்னை* ... 6. 79. 1
*தம்அடியாராகி வீடிலாத் தொண்டர்தம்மை நரகத்தில்*
*வீழ வொட்டார்* ... 4. 70. 7
*ஏழ்நரகத் தென்னைக் கிடக்கவொட்டார் சிவலோகத்*
*திருத்திடுமே* ... 4. 105. 1
*பாங்கிலா நரகதனில் தொண்டரானார் பாராத வகைப்*
*பண்ண வல்லான்* ... 6. 88. 5
*கொடுநரகக் குழிநின்று அருள்தருகை கொடுத்து*
*ஏற்றும் ஐயாறன்* ... 4. 92. 4

தோண்டர் நெஞ்சில் நிலவொளி

*வஞ்சனை யாரார் பாடுஞ் சாராத மைந்தனைத்*
*துஞ்சிருளில் ஆடல் உகந்தானைத் தன்தொண்டர்*
*நெஞ்சிருள் கூரும் பொழுது நிலாப்பாரித்*
*தஞ்சுடராய் நின்றானை நான்கண்ட தாரூரே* ... 4. 19. 8

தோண்டர் பணி

*விச்சை யாவதும் வேட்கைமை யாவதும்*
*நிச்சல் நீறணி வாரை நினைப்பதே*
*அச்ச மெய்தி அருகணை யாதுநீர்*
*பிச்சை புக்கவன் அன்பரைப் பேணுமே* ... 5. 92. 8

தோண்டர் பிணக்கு

*தொண்டர்கள் பிணங்கித் தம்மிற் பித்தரைப்போலப்*
*பிதற்றுவார்* ... 4. 21. 4

தோண்டின் பெருமை

*மீளா ஆளலாக் கைம்மாறில்லை ஐயன் ஐயாறனார்க்கே* 4. 40. 7
*தொண்டர் அகமலாற் கோயிலில்லை ஐயன் ஐயாற*
*னார்க்கே* ... 4. 40. 8
*தொண்டலால் துணையு மில்லை* ... 4. 40. 4

தோண்டுகளில் ஏற்றத் தாழ்வு

*விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றி*
*யாகும், துளக்கின்நன் மலர்தொடுத்தால் தூயவிண்*
*ணேற லாகும், விளக்கிட்டார் பேறு சொல்லின்*
*மெய்ந்நெறி ஞான மாகும், அளப்பில கீதஞ்*
*சொன்னார்க் கடிகள்தாம் அருளு மாறே* ... 4. 77. 3



தோண்ணூற்றாறு தத்துவங்கள்

*துருத்தியாம் குரம்பை தன்னில் தொண்ணூற்றிங்*
*கறுவர்நின்று விருத்திதான் தருகவென்று வேதனை*
*பலவும் செய்ய* ... 4. 25. 4
*முப்பதும் முப்பத்தாறும் முப்பதும் இடுகுரம்பை* ... 4. 54. 3
*தொண்ணூற் றறுவரும் துயக்கமெய்த* ... 4. 67. 5
*எண்பதும் பத்தும் ஆறும் என்னுளே இருந்து மன்னி* 4. 70. 3

தோணிபுரம்

*அலையும் பெருவெள்ளத்து அன்று மிதந்தஇத்*
**தோணிபுரம்** ... 4. 82. 6

நந்திவட்ட மலர்

*சிறிதலர்ந்த* **நந்திவட்டத்தோடு** *கொன்றை வளாவிய*
*நம்பனையே* ... 4. 98. 1

நரிவிருத்தம்

*நரிவிருத்தம தாகுவர்* ... 5. 100. 7

பஞ்சமந்திரம் ... 5. 11. 3

பல்லாண்டு பாடுதல்

*தழலாய நம்பானைப் பாடுவார் பணிவார் பல்லாண்*
*டிசை கூறு பத்தர்கள் சித்தத்துள் புக்குத் தேடிக்*
*கண்டுகொண்டேன்* ... 4. 20. 10

பழமோழிகள்

*அறமிருக்க மறம்விலைக்குக் கொண்ட வாறே* ... 4. 5. 3
*ஆற்றிற் கெடுத்துக் குளத்தினிற் றேடிய ஆதரைப்*
*போல்* ... 4. 97. 6
*இருட்டறையின் மலடுகறந் தெய்த்த வாறே* ... 4. 5. 6
*இருதலை மின்னுகின்ற கொள்ளிமேல் எறும்பென்*
*னுள்ளம்* ... 4. 75. 6
*கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்தவாறே* ... 4. 5. 10
*கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே* ... 4. 5. 1
*கூவலாமை குரைகட லாமையை...* ... 5. 100. 5
*கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டுவித்தென்னை* ... 4. 99. 2
*தோளாத சுரையோ தொழும்பர் செவி* ... 5. 90. 3
*நரிவரால் கவ்வச் சென்று நற்றசை யிழந்ததொத்த* 4. 27. 5
*பனிநீரால் பாவைசெயப் பாவித்தேனே* ... 4. 5. 4

18207

பாழூரிற் பயிக்கம்புக் கெய்த்தவாறே ... 4. 5. 8
மத்துறு தயிரே போல மறுகும்என் னுள்ளம்தானும் 4. 52. 9
மத்தார் தயிர்போல் மறுகுமென் சிந்தை ... 4. 96. 3
மன்றத்துப் புன்னை போல மரம்படு துயரமெய்தி ... 4. 26. 8
முயல்விட்டுக் காக்கைபின் போனவாறே ... 4. 5. 2
மோத்தையைக் கண்ட காக்கைபோல வல்வினைகள் மொய்த்து ... 4. 75. 7
விளக்கிருக்க மின்மினித்தீ காய்ந்தவாறே ... 4. 5. 7
வெங்கதிர் கண்ட அப்புறப்பனி கெடுமாறது போலுமே 5. 97. 23

## பழவினை

பந்தித்த பாவங்கள் அம்மையிற் செய்தன இம்மை வந்து சந்தித்த பின்னைச் சமழ்ப்பதென்னே ... 4. 113. 4
என்**பழவினை** நோய் ஆய்ந்தறுத்தாய் ... 4. 87. 6
அண்டவாணன்தன் ஆரூர் அடிதொழப் **பண்டை வல்வினை** நில்லாப் பறையுமே ... 5. 7. 11
**பண்டை வல்வினை** பற்றறுக்கும்வகை **உண்டு** சொல்வன் கேண்மின் ... 5. 59. 6
முன்னை நான்செய்த பாவம் முதலறப் பின்னைநான் பெரிதுமருள் பெற்றதும் ... 5. 64. 7
பற்பல் காலம் பயிற்றிப் பரமனைச்
சொற்பல் காலநின் றேத்துமின் **தொல்வினை**
வெற்பில் தோன்றிய **வெங்கதிர் கண்ட**அப்
**புற்ப னிக்கெடு மாறது போலுமே** ... 5. 97. 23

## பாசம்

பந்த பாசம் அறுத்தென்னை யாட்கொண்ட மைந்தனை ... 5. 62. 6

## பிறப்பை யொழித்தல்

பேர்த்தினிப் பிறவா வண்ணம் பிதற்றுமின்...பாசுபதன் திறமே ... 4. 41. 6
பாதம் பணிவார்தம் பல்பிறவி ஆய்ந்தாய்ந் தறுப்பாய் 4. 96. 2
அஞ்சு இறப்பும் பிறப்பும் அறுக்கலாம்...அஞ்சலாள் உமை பங்கன் அருளிலே ... 5. 39. 4
சாவாமே காத்தென்னை ஆண்டாய் போற்றி ... 6. 32. 9
நமன்தமரும் சிவன் தமரென்று அகல்வர் நன்கே ... 6. 71. 2



## புலனடக்கம்

அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி எப்போது மினியானை என்மனத்தே வைத்தேனே... 4. 7. 3

## பொட்டு, கண்டி, அட்டாங்கம் முதலியன

திலகமண்டலம் தீட்டித் திரிந்திலர் ... 5. 95. 2
கண்டி பூண்டு கபாலம்கைக் கொண்டிலர் ... 5. 95. 10
அட்டமாங்கங் கிடந்தடி வீழ்ந்திலர் ... 5. 95. 7
மரங்களேறி மலர்பறித் திட்டிலர் நிரம்ப நீர்சுமந் தாட்டி கினைந்திலர் ... 5. 95. 6

## பொருள் எளிதில் விளங்காத பகுதிகள் சில

முனிகளானர்கள் ஏத்தும் **பூவான் மூன்றும் மூந்நூற் றறுபது மாது மெந்தை** ... 4. 29. 9
அஞ்சு மஞ்சுமோ ராடி யரைமிசை
அஞ்சு போலரை யார்த்தநின் தத்துவம்
அஞ்சு மஞ்சுமோ ரோரஞ்சு மாயவன்
அஞ்சு மாமெம் அகத்துறை ஆதியே ... 5. 89. 5
நாக மரைக்கசைத்த நம்ப ரிந்நாள் நனிபள்ளி யுள்ளார்போய் நல்லூர்த் தங்கிப், பாகப் பொழுதெலாம் பாசூர்த் தங்கிப் பரிதி நியமத்தார் பன்னிருநாள், வேதமும் வேள்விப் புகையும் ஓவா விரிநீர் மிழலை எழுநாள் தங்கிப், போகமும் பொய்யாப் பொருளு மானர் புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார்தாமே ... 6. 2. 2
அத்தவத்த தேவர் அறுபதின்மர் ஆறுநூறாயிரவர்க் காடல் காட்டிப், புத்தகங்கைக் கொண்டு புலித்தோல் வீக்கிப் புறம்பயம்நம் மூரென்று போயினரே ... 6. 13. 5
ஐயிரண்டும் ஆறொன்றும் ஆனர் போலும் அறுமூன்றும் நான்மூன்றும் ஆனர் போலும் ... 6. 16. 6
பிரியாத குணமுயிர்கட் கஞ்சோ டஞ்சாய்ப் பிரிவுடைய குணம்பேசிற் பத்தோ டொன்றாய், விரியாத குணமொருகால் நான்கே யென்பர் விரிவிலா குணநாட்டத் தாறே யென்பர், தெரிவாய குணமஞ்சுஞ் சமிதை யஞ்சும் பதமஞ்சுங் கதியஞ்சுஞ் செப்பி னரும், எரியாய தாமரைமே லியங்கி னரும் இடைமருது மேவிய ஈசனரே ... 6. 16.;7.

புகையெட்டும் போக்கெட்டும் புலன்க ளெட்டும் பூத
லங்க ளவையெட்டும் பொழில்க ளெட்டும், கலை
யெட்டுங் காப்பெட்டுங் காட்சி யெட்டுங் கழற்சே
வடியடைந்தார் களைக ணெட்டும், நகையெட்டும்
நாளெட்டும் நன்மை யெட்டும் நலஞ்சிறந்தார்
மனத்தகத்து மலர்க ளெட்டும், திசையெட்டுந்
தெரிப்பதற்கு முன்னே பின்னை திருவாரூர்க்
கோயிலாக் கொண்ட நாளே ... 6. 34. 9

போற்று நாட்கள்

துன்பம் நும்மைத் தொழாத நாட்கள் என்பாரும்
இன்பம் நும்மை எத்து நாட்கள் என்பாரும் ... 4. 21. 9
கோடி காவனைக் கூறாத நாளெல்லாம் பாடி காவலிற்
பட்டுக் கழியுமே ... 5. 78. 6
புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே 6.1.(1—10)
நின் திருவருளே பேசினல்லாற் பேசாத நாளெல்லாம்
பிறவா நாளே ... 6. 47. 10

மங்கலக்குடியிற் பூசித்தோர்

மங்க லக்குடி ஈசனை மாகாளி
வெங்க திர்ச்செல்வன் விண்ணொடு மண்ணும்நேர்
சங்கு சக்கர தாரி சதுர்முகன்
அங்க கத்திய னும்அர்ச்சித் தாரன்றே ... 5. 73. 3

மயிலாப்பு

மங்குல் மதிதவழும் மாடவீதி மயிலாப்பில் உள்ளார் 6. 2. 1
மயிலாப்பில் மன்னினார் மன்னி ஏத்தும் ... 6. 7. 12
வடிவுடையமங்கையும் தாமுமெல்லாம் வருவாரை
எதிர் கண்டோம் மயிலாப்புள்ளே ... 6. 45. 6

மலங்களைப்பற்றிய குறிப்புகள்

மயக்கம் தீர்க்கும் மருந்தினை ... 4. 15. 3
புலன்களைப் போக நீக்கிப் புந்தியை யொருங்க
வைத்து, இலங்களைப் போக நின்று இரண்டையும்
நீக்கி யொன்றாய், மலங்களை மாற்றவல்லார்மனத்
தினுட் போகமாகி, சினங்களைக் களைவர் போலுந்
திருப்பயற்றூ ரனாரே ... 4. 32. 9
மலங் கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவன் ... 6. 20. 6
மூலநோய் தீர்க்கும் முதல்வன் ... 6. 23. 9



அனைத்துலகும் ஆளலா மென்று பேசும் ஆங்காரம்
தவிர்நெஞ்சே ... 6. 42. 5

முருகக் கடவுள்

ஆறுகொலாம் அவர் தம்மகனார்முகம் ... 4. 18. 6
சேந்தனை மகனுக் கொண்டார் ... 4. 43. 8
குறவிதோள் மணந்த செல்வக்குமரவேள் ... 4. 60. 3
கடம்பமர் காளை தாதை ... 4. 75. 4
சூரட்ட வேலவன் தாதை ... 4. 104. 5
முன்னையார் மயில் ஊர்தி முருகவேள் ... 5. 16. 7
நங்கடம்பனைப்பெற்றவள் பங்கினன் ... 5. 19. 9
சமரசூரபன்மாவைத் தடிந்தவேற்குமரன் ... 5. 64. 10
டம்பன் தாதை ... 5. 84. 6
வள்ளிவளைத்தோள் முதல்வன் தன்னை ... 6. 3. 2
முருகவேள் தன்னைப் பயந்தாய் ... 6. 5. 10
சரவணத்தான் கைதொழுது சாரும் அடி ... 6. 6. 1
குமரனும் விக்கின விநாயகனும் ... 6. 13. 10
பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும் ... 6. 18. 4
நம் செந்தில் மேய வள்ளிமணாளற்குத்தாதை ... 6. 23. 4
குமரன் தாதை ... 6. 42. 6
வேலார் கைவீரியை ... 6. 53. 6
முருகவேட்குத் தந்தைகாண் ... 6. 65. 9
அறுமுகனோ டானைமுகற் கப்பன் தன்னை ... 6. 74. 7
வேற்குமரன் தாதைபோலும் ... 6. 75. 7
கோழிக் கொடியோன்தன் தாதை போலும் ... 6. 89. 2

மேலைவினை

அடியார் மேல்வினை தழுவின கழுவுவர் ... 4. 10. 5
பத்தர்கள் தங்கள் மேலை ஏதங்கள் தீர்கின்றார் ... 4. 35. 5
முத்தியை முற்றவைத்தார் முறைமுறை நெறிகள்
வைத்தார் ... 4. 38. 7
முன்பின் முதல்வன் முனிவன் எம்மேலைவினை கழித்
தான் ... 4. 90. 3
ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ ஓடிப் போகும்நம்
மேலை வினைகளே ... 5. 5. 4
அண்டத் தோங்கும் அண்ணாமலை கைதொழ விண்டு
போகும் நம்மேலை வினைகளே ... 5. 5. 8
இடைமருதா என விண்டுபோய் அறும் மேலை வினை
களே ... 5. 14. 5

## யாக்கையின் இழிவு

*பிறத்தலும் பிறந்தாற் பிணிப்பட வாய்ந்தசைந்துட லம் புகுந்துநின் றிறக்குமா றுளதே இழித்தேன் பிறப்பினை நான்* ... 4. 20. 8

*பழியுடை யாக்கை தன்னில் பாழுக்கே நீரிறைத்து, வழியிடை வாழமாட்டேன் மாயமுந் தெளிய கில்லேன், அழிவுடைத் தாயவாழ்க்கை ஐவரால் அலைக் கப்பட்டுக், கழியிடைத் தோணி போன்றேன் கட வூர் வீரட்டனீரே* ... 4. 31. 6

*கால்கொடுத்திருகை ஏற்றிக் கழிநிரைத் திறைச்சி மேய்ந்து; தோல்படுத் துதிரநீராற் சுவரொடுத் திரண்டு வாசல், எல்வுடைத் தாவமைத்தங் கேழு சாலேகம் பண்ணி, மால்கொடுத்தாவி வைத்தார் மாமறைக் காடனாரே* ... 4. 33. 4

*ஒருமுழமுள்ள குட்டம் ஒன்பது துறையுடைத்தாய் அரைமுழம் அதனகலம் அதனில் வாழ்முதலை ஐந்து* 4. 44. 2

*புழுப்பெய்த பண்டிதன்னைப் புறமொரு தோலான் மூடி, ஒழுக்கறு ஒன்பதுவாய் ஒற்றுமை யொன்று மில்லை, சழக்குடை இதனுள் ஐவர்சங்கடம் பலவுஞ் செய்ய, அழிப்பனாய் வாழமாட்டேன் ஆரூர் மூலட் டனீரே* ... 4. 52. 2

*கால்கொடுத் தெலும்பு மூட்டிக் கதிர்நரம் பாக்கை யார்த்துத், தோலுடுத் துதிரமட்டித் தொகுமயிர் மேய்ந்த கூரை, ஒலெடுத்துழை ஞர்கூடி ஒளிப்ப தற்கஞ்சுகின்றேன்* ... 4. 67. 3

*நடுவிலாக் காலன் வந்து நணுகும்போ தறிய வொண்ணா, அடுவன அஞ்சுபூதம் அவைதமக் காற்ற லாகேன், படுவன பலவுங் குற்றம் பாங்கிலா மனி தர் வாழ்க்கை, கெடுவதிப்பிறவி சீசீ கிளரொளிச் சடையினீரே* ... 4. 76. 10

*ஊனுடுத்தி யொன்பது வாசல் வைத்து வொள் ளெலும்பு தூணா வுரோமமேய்ந்து, தாமெடுத்த கூரை தவிரப் போவார் தயக்கம்பல படைத்தார்* 6. 12. 1

*பேசப் பொருளலாப் பிறவி தன்னைப் பெரிதென் றுன் சிறுமனத்தால் வேண்டியீண்டு வாசக்குழல் மடவார்* ... 6. 42. 7



## யோகம்

*உயிராவண மிருந்து உற்று நோக்கி உள்ளக்கிழியின் உருவெழுதி உயிராவணஞ் செய்திட்டு* ... 6. 25. 1

## வஞ்சமிலாத் தொண்டர்க்கருள்

*கரவிலா மனத்தராகிக் கைதொழுவார்கட் கென்றும் ...இன்னருள் செய்யுமெந்தை* ... 4. 58. 3

## வரலாறு—அப்பூதியடிகள்

*அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி குஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாய்* ... 4. 12. 10

,, —அமர்நீதி நாயனார்

*நல்லூரகத்தே கீட்கொண்ட கோவணங் காவென்று சொல்லிக் கீறிபடத்தான் வாட்கொண்ட னேக்கி மனைவியொடும் அங்கொர் வாணிகனை* ... 4. 97. 7

,, —அரிவாட்டாயர்?

*அங்கொர் கோடலியால் இருப்பு பிடித்தவர் இன்புறப் பட்டார்* ... 4. 102. 5

,, —அருச்சுனற்குப் பாசுபதம் தந்தது

*அருச்சுனற்குப் பாசுபதம் கொடுத்தானை* ... 4. 7. 10

*வேடனாய் விசயன்தன் வியப்பைக் காண்பான் வில் பிடித்துக் கொம்புடைய ஏனத்தின்பின் கூடினார் உமையவளும் கோலம் கொள்ளக் கொலைப்பகழி உடன்கோத்து* ... 6. 83. 5

,, —ஆலின்கீ ழறமுரைத்தது

*ஆலின்கீழ் அறம் நால்வர்க்கு அன்றுரைத்தான்* ... 4. 6. 10

*ஆலின்நீழல் அறம் பகர்ந்தார்* ... 5. 25. 10

*ஆலத்தார் நிழலில் அறம் நால்வர்க்குக் கோலத்தால் உரை செய்தவன்* ... 5. 59. 2

,, —ஆலின்கீழ் ஆரண மோதியது

*ஆலினிற் கீழிருந்து ஆரணம் ஓதி* ... 4. 107. 6

வரலாறு—இராமன் இராவணனைக் கொன்றது

*செங்கண்மால் சிலைபிடித்துச் சேனையொடுஞ் சேது பந்தனஞ் செய்து சென்றுபுக்குப், பொங்குபோர் பலசெய்து புகலால் வென்ற போரரக்கன்* ... 6. 58. 10

,, —இராவணனுக்குச் சிவன் அப்பெயர் தந்தது

*பத்திலங்கு வாயாலும் பாடல் கேட்டுப் பரிந்தவனுக் கிராவண னென்றீந்த நாம தத்துவனை* ... 6. 79. 10

,, —இராவணனுக்கு வாள் தந்தது

*கடுத்தமேனி அரக்கன் கயிலையை...கொடுத்தனன் கொற்றவாளொடு நாமமே* ... 5. 87. 10

,, —இராவணன் இலங்கையில் சூரிய வெப்பமில்லை

*இருசுடர் மீதோடா இலங்கைக்கோனை* ... 6. 39. 10

,, —இராவணன் கயிலைமீது தேர்விட்டது

*கடுகிய தேர்செலாது கயிலாயமீது கருதேல் உன்வீர மொழிநீ...* ... 4. 14. 11

,, —இராவணன் குபேரனிடமிருந்த புட்பக விமானத்தைப் பற்றியது

*பொருள் மன்னனைப்பற்றிப் புட்பகங் கொண்ட மருள்மன்னனை* ... 4. 17. 11

,, —இராவணன் கோள்களைவென்றமை

*சனியும் வெள்ளியும் திங்களும் ஞாயிறும்*
*முனிவனாய் முடிபத் துடையான் றனைக்*
*கனிய வூன்றிய காரண மென்கொலோ*
*இனியனாய் நின்ற இன்னம்பர் ஈசனே* ... 5. 21. 10

,, —உபமன்னியுவுக்குப் பாற்கடலீந்தது

*பாலனுக்காய் அன்று பாற்கடலீந்து* ... 4. 107. 6

,, —உமைகண் மூடியது

*நலமலிமங்கை நங்கை விளையாடியோடி நயனத் தலங்கள் கரமா, உலகினை யேழுமுற்றும் இருள்மூடமூட இருளோட நெற்றியொருகண், அலர்தர அஞ்சி மற்றை நயனங்கை விட்டு மடவாளிறைஞ்ச மதி*



*போல், அலர்தரு சோதிபோல அலர்வித்த முக்கணவனை நமக்கோர்சரணே* ... 4. 14. 8

வரலாறு—உமைகாண நடமாடியது

*இவர் ஆடுமாறும் இவள் காணுமாறும் இதுதானிவர்க் கொரியல்பே* ... 4. 8. 3

,, —உமைக்கு ஆகமம் ஓதியது

*பணியிலாகமம் சொல்லும் தன் பாங்கிக்கே* ... 5. 15. 4

,, —உமைதழுவக் குழைந்தது

*கொழும் பவளச் செங்கனிவாய்க் காமக்கோட்டி கொங்கையிணை அமர்பொருது கோலங்கொண்ட தழும் புளவே வரை மார்பில்* ... 6. 4. 10

,, —கணம்புல்லர்

*கணம்புல்லர்க்கருள்கள் செய்து காதலாம்* ... 4. 49. 9
*எண்ணிறைந்த குணத்தினாலே கணம்புல்லன் கருத் துகந்தார்* ... 6. 12. 7

,, —கண்ணப்பர்

*காப்பதோர் வில்லும் அம்பும் கையதோர் இறைச்சிப் பாரம், தோற்பெறும் செருப்புத் தொட்டுத் தூய வாய்க் கலசம் ஆட்டித்,தீப்பெறும் கண்கள் செய்ய குருதிநீர் ஒழுகத் தங்கண், கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கைவீரட்ட னாரே* ... 4. 49. 7
*குவப்பெரும் தடக்கை வேடன்......ஒருகணை இடந் தங்கப்ப* ... 4. 65. 8
*கண்ணப்பன் கண்ணப்பக் கண்டுகந்தார்* ... 6. 12. 6
*கண்ணப்பர்க்கருள் செய்த காளைகண்டாய்* ... 6. 39. 9

,, —காமதகனம்

*கண்ணினாற் காமவேளைக் கனலெழ விழிப்பர் போலும்* 4. 68. 3

,, —காலபயிரவர்

*விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமருகங்கை தரித்ததோர் கோல* **கால பயிரவனாகி** *வேழம் உரித்து* ... 4. 73. 6

வரலாறு—கிருஷ்ணன்

ஞாலமும் மேலை விண்ணொடுலகேழும் உண்டு குறளாய் ஓராலின் இலைமேல் பாலனாமாய் அவர்க்கொர் பரமாயமூர்த்தியவனா நமக்கொர் சரணே ... 4. 14. 3
குழலும் ஊதும் கோவலன் ... 6. 3. 10

,, —கோச்செங்கட் சோழர்

சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற்பந்தர் செய்து, உலந்தவண் இறந்த போதே கோச்செங்கணானாகக், கலந்த நீர்க்காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள், குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே 4. 49. 4, 4. 62. 9, 4. 65. 3, 6. 20. 5, 6. 23. 3, 6. 65. 6, 6. 75. 8, 6. 83. 6 முதலியன

,, —சண்டேசுவரர்

அண்டமார் அமரர்கோமான் ஆதிஎம் அண்ணல் பாதங், கொண்டவன் குறிப்பினாலே கூப்பினான் தாபரத்தைக், கண்டவன் தாதை பாய்வான் காலற எறியக் கண்டு, தண்டியார்க்கருள்கள் செய்த தலைவர் ஆப்பாடியாரே 4. 48. 4, 4. 49. 3, 4. 65. 6, 4. 73. 5, 5. 2. 4, 6. 18. 10 முதலியன

,, —சாக்கிய நாயனார்

கல்லினால் எறிந்து கஞ்சி தாமுணும் சாக்கியனார், நெல்லினாற் சோறுணாமே நீள்விசும்பாள வைத்தார் 4. 49. 6
புத்தன் மறவாதோடி எறிசல்லி புதுமலர்கள் ஆக்கினான்காண் ... 6. 52. 8

,, —சிலந்தி

(கோச்செங்கட்சோழர் பார்க்க)

,, —சிவபெருமான் வீணை வாசித்தது

தங்கையின் யாழும் வைத்தார் தாமரை மலரும் வைத்தார் ... 4. 30. 1
உலகமெல்லாம் ஒடுங்கியபின் வேதத்தொலி கொண்டு வீணை கேட்பார் ... 6. 35. 2



பெருங்கடல் மூடி பிரளயம் கொண்டு பிரமனும் போய்......வருங்கடல் மீள நின்றுஎம் இறைநல் வீணை வாசிக்குமே ... 4. 112. 7

வரலாறு—சிவனே திருமாலாய் இரணியனைக் கொன்றது

நேமிவான் படையால் நீளுரவோன் ஆகங் கீண்டானைக் கேதாரம் மேவினானை ... 6. 54. 1

,, —சுந்தரன்

சுந்தரனைத் துணைக்கவரி வீசக்கொண்டார் ... 6. 96. 5

,, —தக்கன் யாகம் அழித்தது

எச்சன் நிணத்தலை கொண்டார் பகன்கண் கொண்டார் இரவிகளி லொருவன் பல்லிறுத்துக் கொண்டார், மெச்சன் வியாத்திரன் தலையும் வேறாக் கொண்டார் விறலங்கிக்கரங் கொண்டார் வேள்வி காத்து,உச்சநமன் தாளறுத்தார் சந்திரனை யுதைத்தார், உணர்விலாத் தக்கன்றன் வேள்வியெல்லாம், அச்சமெழ அழித்துக்கொண் டருளுஞ் செய்தார் அடியேனை யாட்கொண்ட அமலர்தாமே ... 6. 96. 9

,, தருமிக்குப் பொற்கிழி தந்தது

நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக் கிழிதருமிக்கு அருளினான்காண் ... 6. 76. 3

,, திரிபுரம் எரித்தது

நிலையிலா ஊர்மூன் றொன்ற நெருப்பரி காற்றம் பாகச், சிலையுநா ணதுவு நாகங் கொண்டவர் ... 4. 64. 4
பூண்நாகம் நாணாகப் பொருப்பு வில்லாக் கையினார் அம்பெறிகால் ஈர்க்குக் கோலாக் கடுந்தவத்தோர் நெடும்புரங்கள் கனல்வாய் வீழ்த்த ... 6. 86. 9

,, —திருஞானசம்பந்தர்

கழுமல வூரர்க்கம்பொன் ஆயிரம் கொடுப்பர்போலும் ஆவடுதுறையனாரே ... 4. 56. 1
திறக்கப்பாடிய என்னினும் செந்தமிழ் உறைப்புப் பாடி அடைப்பித்தாரும் நின்றார் ... 5. 50. 8
உண்ணீரார் ஏடகமும்...தம்காப்புக்களே ... 6. 7. 7

## வரலாறு—திருமால் உலகளத்தல்

*மண்ணினைத்தாவ நீண்ட மாலினுக்கு அருளும் வைத்தார்* ... 4. 30. 2

### ,, —திருமால் கண்ணைக் கோடுத்தது

*தடமலர் ஆயிரங்கள் குறைவொன்றதாக நிறைவென்று தன்கணதனால், உடன்வழி பாடுசெய்த திருமாலை யெந்தைபெருமா னுகந்துமிகவும், சுடராடியான் முயன்று சுழல்வித் தாக்கன் இதயம் பிளந்த கொடுமை, அடல்வலி ஆழிஆழி யவனுக் களித்த அவனை நமக்கொர் சரணே* ... 4. 14. 10

*ஏறுடன் ஏழடர்த்தான் எண்ணி ஆயிரம்பூக் கொண்டு, ஆறுடைச் சடையினானை அர்ச்சித்தான் அடியிணைக்கீழ், வேறுமோர் பூக்குறைய மெய்ம்மலர்க் கண்ணை மிண்டக், கூறுமோர் ஆழி ஈந்தார் குறுக்கைவீரட்ட னாரே* ... 4. 49. 5

### ,, —நஞ்சுண்டது

*வடங்கெழு மலைமத்தாக வானவர் அசுரரோடு, கடைந்திட எழுந்த நஞ்சங் கண்டுபஃறே வாஞ்சி, அடைந்துநுஞ் சரணமென்ன அருள்பெரி துடையராகித், தடங்கடல் நஞ்சம் உண்டார் சாய்க்காடு மேவினாரே* ... 4. 65. 2

*கடல்நஞ்சினைப் பங்கிஉண்டதோர் தெய்வம் உண்டோ சொலாய்* ... 5. 33. 6

*சங்கை யொன்றின்றியே தேவர் வேண்டச் சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச் சிங்கமே* ... 6. 99. 2

### ,, —நந்திக்கருளியது

*நந்திக் கருள்செய்தாய் நீயேயென்றும்* ... 6. 41. 5

### ,, நமிநந்தியடிகள்

*தொண்டன்நம்பி நந்திநீரால் திருவிளக் கிட்டமை நீணா டறியு மன்றே* ... 4. 102. 2

*அடித்தொண்டன் நந்தியென்பா னுளன் ஆரூர் அமுதினுக்கே* ... 4. 102. 4

*நந்திபணி கொண்டருளும்...அரநெறியில் அப்பன்...* 6. 33. 4



*அந்தவளப் பொடிகொண் டணிவார்க்கு இருளொக்கும் நந்தி புறப்படிலே* ... 4. 102. 9

## வரலாறு—பிரமன் அறுத்தகையுடைமை

*அறுத்ததொர் கையுடையான் படைத்தான் தலையை* 4. 93. 3

*அறுத்திருந்த கையானை மந்தாரல்லி யிருந்தானை* ... 6. 15. 10

### ,, —பிரளயத்தில் கடவுளைப் புள்ளினம் ஏந்தின

*பார்கொண்டு மூடிக்கடல் கொண்டஞான்று நின்பாத மெல்லாம் நாலஞ்சு புள்ளினம் ஏந்தின என்பர்* ... 4. 82. 1

### ,, —மறைகளைத் தேர்க் குதிரையாக்கியது

*அருமறையைத் தேர்க்குதிரை ஆக்கிக்கொண்டார்*... 6. 96. 5

### ,, —மாகாளன்

*மாகாளன்வாசல் காப்பாக் கொண்டார்* ... 6. 96. 5

### ,, —மார்க்கண்டேயர்க்காக எமனை உதைத்தது

*பாலனை யோடவோடப் பயமெய்து வித்தஉயிர் வவ்வு பாசம் விடுமக், காலனை வீடுசெய்த கழல்போலும்* 4. 14. 6

4. 31. 9, 4. 49. 2, 4. 65. 1, 4. 107. (1 - 10), *முதலியன பல.*

### ,, —மாவலியிடம் நிலம்பெற்றது

*மாவலிபால் காணிக்கு இரந்தவன் காண்டற் கரியன* 4. 108. 1

### ,, மாவலியின் முற்பிறவி

*நிறைமறைக் காடுதன்னில் நீண்டெரி தீபந்தன்னைக், கறைநிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக்கனன்று தூண்ட, நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்ட வானுலகம் எல்லாங், குறைவறக் கொடுப்பர்போலுங் குறுக்கை வீரட்டனாரே* ... 4. 49. 8

### ,, முயலகனை யடக்கியது

*தருக்கழிய முயலகன்மேல் தாள்வைத்தானை* ... 6. 90. 9

*அடங்காத முயலகனை அடிக்கீழ்க் கொண்டார்* ... 6. 96. 3

### ,, வாதவூரடிகள் பற்றியனவா ?

*மணியார் வைகைத் திருக்கோட்டி னின்றதோர் திறமும் தோன்றும்* ... 6. 18. 9

*நரியைக் குதிரை செய்வானும்* ... 4. 4. 2

குடமுழ நந்தீசனை வாசகனுக் கொண்டார் ... 6. 96. 11

வரலாறு—வாமனன் உதிரங் கொண்டது

வாமனனார் மாகாயத்து உதிரங் கொண்டார் ... 6. 96. 1

,, —விநாயகர் கஜமுகாசுரனைக் கொன்றது

கைவேழ முகத்தவனைப் படைத்தார்போலும் கயா
சுரனை யவனாற் கொல்வித்தார் போலும் ... 6. 53. 4

,, —விருத்தகுமார பாலரானது

விருத்தனாகிப் பாலனாகி விரிநிலா எரிக்கும் சென்னி
நிறுத்தநாள் ... 4. 22. 9
பாலனாய் விருத்தனாகி...கடவுளார் ... 4. 22. 10
விருத்தராகும் பாலனார் பசுபதியார் ... 4. 43. 2

,, —வெள்ளானை வழிபட்டது

வித்தகத்தால் வெள்ளானை விள்ளாஅன்பு விரவியவா
கண்டதற்கு வீடுகாட்டி ... 6. 83. 6

,, —வெள்ளைப்பன்றி வழிபட்டது

பிறையெயிற்று வெள்ளைப்பன்றி பிரியாது பலநாளும்
வழிபட்டேத்தும் சீரவன்காண் ... 6. 87. 6

வழக்காறுகள் சில

பால்தலையில் தெளித்துத் தன்பாதம் காட்டி ... 4. 5. 4
ஆவியார் போவதுமே......மையினாற் கண்ணெழுதி
மாலைசூட்டி ... 6. 61. 7
கையினொடு கால்கட்டி ... 5. 79. 7
முருட்டு மெத்தையில் முன்கிடத்தா முனம் ... 5. 7. 5
புளியம் வாளரால் மோதுவிப்பாய் ... 4. 99. 1

வழிபடுங் காரணம்

அஞ்சியாகிலும் அன்புபட்டாகிலும்
நெஞ்சம்வாழி நினைநின்றி யூரைநீ ... 5. 23. 9

வாழ்க்கை நிலையாமை

தந்தையார் தாயாருடன் பிறந்தார் தாரமார் புத்திர
ரார் தாந்தாமாரே, வந்தவா றெங்ஙனே போமா
றேதோ மாயமாமிதற் கேதுமகிழ வேண்டாம் ... 6. 93. 10

வானநூல் நுட்பம்

சென்றுருளும் கதிரிரண்டும் விசும்பில் வைத்தார் ... 6. 14. 9



விசயமங்கை

கொள்ளிடக்கரை **கோவந்தபுத்தூரில்** வெள்விடைக்
கருள்செய் **விசயமங்கை** ... 5. 71. 3

விநாயகர்

கலமலக் கிட்டுத் திரியும் கணபதியென்னும் களிறும் 4. 2. 5
குமரனும் விக்கின விநாயகனும் ... 6. 13. 10
கைவேழ முகத்தவனைப் படைத்தார் ... 6. 53. 4
தண்கடமா முகத்தினார்க்குத் தாதை ... 6. 65. 9
ஆனைமுகற் கப்பன் தன்னை ... 6. 74. 7
மெல்லியலும் விநாயகனும் தோன்றக் கண்டேன் ... 6. 77. 8

விநோதம்—திருப்பாற்கடலில் வங்கம்

**வங்கமலிகடல்** நஞ்சமுண்டாய் போற்றி ... 6. 32. 2

வினைநாசம்

அல்லல் என்செயும் அருவினை என்செயும்...
எல்லை யில்லதோர் அடிமைபூண் டேனுக்கே ... 5. 1. 4
ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ ஓடிப்போம் நம
துள்ள **வினைகளே** ... 5. 5. 5
ஆரூரை தூரத்தே தொழுவார் **வினை** தூளியே ... 5. 7. 9
பரமனைத் தொழுது செல்பவர்தம் வினைதூளியே ... 5. 41. 3
நண்ணினாரை நண்ணா வினைநாசமே ... 5. 14. 7
சிந்தையால் நினைவார்வினை தேயுமே ... 5. 14. 8

வேதசொரூபன்—இருக்கு

எண்ணுடை இருக்குமாகி இருக்கினுட் பொருளுமாகி 4. 48. 3

,, —சாமம்

பாடினார் சாமவேதம் பைம்பொழிற் பழனமேயார்... 4. 68. 8
சாமவேத கந்தருவம் விரும்புமே கபால மேந்துங்
கையனே ... 6. 4. 1
சந்தோக சாமம் ஓதும் வாயானை ... 6. 50. 4

வேதவித்து

விரிந்தானைக் குவிந்தானை வேதவித்தை ... 6. 86. 6

---

## அப்பர் தேவாரம் 2-ம் பதிப்பு

விலை ரூபா ஒன்று. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 8.

# பாடுவித்த நாயகன்

[உதவிப் பத்திராசிரியர்]

யாரைப் "பாடுவித்த நாயகன்" எனக் கேட்பின், "நாயேனை" என விடை பகர்வர் மாணிக்கவாசகப் பெரியார். எவற்றைப் பாடுவித்த நாயகன் எனக் கேட்பினோ "தன்னடிகளை" என விடையிறுப்பர். அங்ஙனம் பாடுவித்தவன் எத் தன்மையன் என வினவினாலோ, "பேயேனது உள்ளப் பிழை பொறுக்கும் பெருமையன்" என்றும், "ஓயேனும் இல்லாது என் செய்பணிகள் கொண்டருளுந் தாயான ஈசன்" என்றும் உத்தரம் தருவர்

அப்பெரியார் "நாயேனை" என்று கூறுவானேன் என்று பெரிதும் கலங்கவேண்டா. ஓரிலையிலுள்ள தனைச் சுவைத்துக் கொண்டிருக்கும் பொழுதே மற்றோர் இலை விழும் ஓசையைக் கேட்டு அதனை நீத்து மற்றதன்பாலே செல்லும் நாய்போலத் தாமும் அன்றித் தம் போலியராகிய மக்களும் ஒரு தேவரை வழிபட்டுக் கொண்டிருக்குங் காலையில் மற்றொரு தேவர் எதிர்ப்பட்டுழி முதற்றேவரை விட்டு மற்றத் தேவர்பாற் சேறலுறுவதனை நினைத்து இங்ஙனம் மொழிந்தார் போலும்!

தசையைத் தின்று இன்புறுமல் பயன்றா மாட்டாத எலும்பைக் கடித்துக் கடித்துப் பொய்யின்பம் துய்க்கும் நாயேபோல மெய்த்தேவர்தேவரை வழிபடாது பொய்த் தேவரை வணங்கிப் பொய்மகிழ்ச்சி யடைகின்ற மக்களை நோக்கி இங்ஙனம் கூறினர் என்க. நாய் பெற்ற எலும்பால் மகிழ்வதே போன்று பொய்யாய செல்வத்தே நாடோறும் புக்கழுந்தி மெய்யாகக் கருதிக் கிடக்கும் மக்கள் நாயே யனையார் என்பதில் யாதுளது ஐயம்? அன்றியும், ஏழை எசமானர்க்கு இச்சையானவற்றைச் செய்து அவரோடு இணங்கித் திரியும் புழுத்தலை நாய்போல ஞானமில்லாத் தலைவர்க்கு உகந்தவற்றைச் செய்து அவரோடு மகிழ்ந்து திரியும் புழுத்தலைப் புலையர் பலர் நாயே அனையார் என்பதிற்றான் என்னுளது ஐயம்?



நாய்க்குத் தவிசு ஈந்தால் அது என் செய்யும் என்பது தெரியாதா? அதனைச் சிவிகையில் ஏற்றுவித்தால் அது யாது விளைக்கும் என்பதும் தெரியாதா? ஏறிய தவிசும் மேவிய சிவிகையும் சுத்தமாக இருக்கும் என்று நம்ப இடமுண்டா? கிடைத்தற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற மக்கள் அதனை வீணாக்கி நாசமாக்கிக் கெடுப்பாரேயானால் அவர் நாயினும் உயர்ந்தார் என்றல் யாண்டைக்குப் பொருந்தும்? இவற்றையெல்லாம் நோக்கியே மாணிக்கவாசகப்பெம்மான் "நாயேனை" எனத் தம்மீது வைத்துக் கூறினாராதல் வேண்டும்.

"தன்னடிகள்" என்றவை பாடுவித்த நாயகனுடையன. பூமேல் உள்ள அயனும் மாலும் தமக்குப் புகலரியன என்று ஏமாறி நிற்கும் அடிகள் அவை. வானவரும் வானவர் தலைவனும் நாவேறு செல்வியும் நான்மறையும் அறியாத அவ்வடிகள் செம்மை நிறம் வாய்ந்தவை; ஏறிய இடபத்தை உதைப்பவை; எதிரே வந்த கூற்றினை உதைத்தவை; வணங்கினார்க்கு வீடுபேறாய் நிற்பவை. அந்நாயகன் வேறு அவனடிகள் வேறு என்று கொள்ளற்கில்லை. அவனும் அவனடிகளும் ஒன்றே. இதுபற்றியே போலும் "அரனடியை அகன்று நிற்பது எங்கே ஆமே" (சூத். 11; அதி. 1) என்ற சிவஞானசித்தியார் பகுதிக்குச் சிவஞான சுவாமிகளும் "இறைவனை விட்டுத் தனித்து நிற்றல் ஓரிடத்தும் இல்லை" என்று பொழிப்பு வரைந்தார்! அவ்வடி மலர்கள் நினைக்குந்தோறும் காணுந்தோறும் பேசுந்தோறும் எப்போதும் எலும்

பெல்லாம் உள்ளே யுருகா நிற்கவும் குறைவிலா ஆனந்தத் தேனைச் சொரிகின்றவை.

அவ்வடிகட்குச் செய்யும் அன்பே அன்பு; செய்யும் அறமே அறம். "அவனடிக்கு அன்பு செய்கை மாண்பறம், அரன்றன் பாதம் மறந்து செய் அறங்கள் எல்லாம் வீண் செயல்" என்ற சித்தியார் (சூத். 2; அதி. 3. செய். 27) பகுதியை நோக்குக. அவ்வடிகளைக் கண்டு பூசித்தல் இயலாதே எனின், தாபர சங்கமங்களாகிய திருக்கோயிற்றிருமேனி திருவேடம் ஆகிய இரண்டிலும் நின்று மாபரன் பூசையை ஏற்பன் என்பது சாத்திரம் என்க. அன்றி, இறைவனை நெஞ்சில் நினைத்துப் படமாடுங்கோயில் நடமாடுங் கோயில்களிலுள்ள அவற்குச் செய்வன செய்தன ஆகும் என்றலும் ஒன்று. அவனை நெஞ்சில் நினைப்பார் பாடாமல் பரவாமல் இருப்பாரா?

அவர் பாடுவதும் அவன் அருளால் அன்றோ? அவனன்றோ உள்நின்றும் செய்வித்தும் செய்கின்றான்? (சித்தி. சூத். 10; அதி. 2; செய். 4) ஆதலால் அன்றே நமது பெரியவர் "பாடுவித்த" என்றார்.

எப்படிப் பாடுவித்தார் என்பதனை அறியத் திருவாசகம் முழுதும் ஓதலே ஏற்புடைத்தாயினும் காட்டாக ஒன்றிரண்டு செய்யுட்கள் ஈண்டுத் தருவேன் :—

i. "ஐயா, என்னாருயிரே, அம்பலவா." **(திருக்கோத்தும்பி)**

ii. "வான நாடரும் அறியொணாத நீ
மறையில் ஈறுமுன் தொடவொணாத நீ
ஏனை நாடரும் தெரியொணாத நீ
என்னை யின்னிதா யாண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடுவித் தவா
உருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடுவித்தவா
நைய வையகத் துடைய விச்சையே."

iii. "பாடவேண்டும் நான்போற்றி நின்னையே
பாடிநைந் துநைந்து உருகி நெக்குநெக்கு
ஆட வேண்டும் நான்போற்றி அம்பலத்து
ஆடும் நின்கழற்போது நாயினேன்
கூடவேண்டும் நான்போற்றி இப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீடவேண்டும் நான்போற்றி வீடுதந்து
அருளு போற்றி நின்மெய்யர் மெய்யனே."
**(திருச்சதகம்)**



அங்ஙனம் பாடுவித்தவன் சிறந்தநற் றலைவனே என்க. வானுந் திசைகளும் மாகடலும் ஆய தலைவன் அவன். அவன் தீமேனியனாய் நின்ற கதையே அவனது தலைமைப்பாட்டை நன்கு வலியுறுத்தும். இதற்குச் சாத்திர ஆதாரமும் உண்டு. "உலகெலாம் ஆகி, வேறாய், உடனுமாய், ஒளியாய் ஓங்கி, அலகிலா உயிர்கள் கன்மத்து ஆணையின் அமர்ந்து செல்லத் தலைவனாய்" என்ற சித்தியார் இரண்டாஞ் சூத்திரப் பகுதியைக் காண்க. காணின், அதனால் "பாடுவித்த நாயகன்" என்றார் நம் அண்ணல் என்பது விளங்கும்.

என்னைப் பாடுவித்தார் ஆயினும் இன்னும் எனது பேய்க் குணம் போகவில்லையே என்று வருந்துகின்றார் பெரியார். தமது தமதென்று கருதி வருஞ் செல்வத்தைத் தாமும் அறநெறியில் துய்க்காது பிறர்க்கும் அறங்கருதி ஈயாது வாழ்ந்து வரும் மக்கள் தானும் பயன் பெறாது பிறர்க்கும் பயன் தராது நிற்கும் பேயே யனையார் என்று கூற நினைத்தே "பேயேன்" எனத் தம்மீது வைத்து அவர் கூறினார்போலும்!

அலைந்து திரியும் பேய்போலன்றோ மக்கள் சிலர் சித்த விகாரக் கலக்கத்தால் உழலுகின்றனர்? கண்:— பெண்டிரை மேவ விரும்பும் பேயேபோல விரும்பி நிறைகெட்டு மதிகெடுவார் எத்துணை பேர்! எத்துணைபேர்!! அவரை யெல்லாம் சிந்தையிற் கருதியே மணிவாசகனார் தம்மைப் "பேயேன்" என்றார் ஆதல் வேண்டும்.

இதனால் மனத்தாற் கருதியதே பாவமாய் விடும் என்பது தோன்றுகின்றது. "உள்ளத்தால் உள்ளலுந் தீதே; பிறன் பொருளைக் கள்ளத்தாற் கள்வேம் எனல்" என்ற வள்ளுவர் வாய்மொழியை உன்னுக. "பெண்ணொருத்தியைக் காமஇச்சையோடு பார்க்கும் எவனும் தன் இருதயத்தால் அவளோடு விபசாரஞ் செய்தவனானான்" என்ற ஏசுநாதர் மொழியும் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது. எனவே, உள்ளத்தால் உன்னிய பிழையும் பிழையே ஆதல் ஒருதலை. ஆதலாற்றான் உள்ளப் பிழையனைத்தும் பொறுக்கும் பெற்றியாளனைச் சாரவேண்டும் என்று மணிவாசகர் அறிவுறுத்துகின்றார். அப்பெற்றியாளன் தன் பிழைக்குத் தான் அஞ்சி உய்தி தேடிய கதை நாம் அறியாதது ஒன்றன்று. ஆனால், மதிமயங்கிய பிரமனது ஊனார் உடைதலையில் உண்பலி தேர் அவ் அம்பலவன் நம் பிழையனைத்தும் பொறுக்கக் காத்திருக்கின்றான். அவனை அணுகும் வழியை அறிந்துகொள்ளாதது நமது குற்றமே. ஐந்தெழுத்தை விதிப்படி யுச்சரிப்போம் ஆயின், கள்வனிவன் கடியனிவன் கசடனிவன் என்னாமல் அவன் வரவர வந்தொழிவன் நம்மனத்தே. வன்னெஞ்சக் கள்வனிவன் மனவலியனிவன் என்னாமல் நமது கல்போலும் நெஞ்சையுருக்கவல்ல பெருமை வாய்ந்தவன் அவன் என்று காட்டற்கே "பேயேனது உள்ளப் பிழைபொறுக்கும் பெருமையன்" என்றார்.



இப்பெருமையற்குச் செய்யும் பணிகள் சிலவுள. திருவாசகத்தேன் தந்த வள்ளல் கூறுவது இது:—"உருகிப் பெருகி யுளங்குளிர முகந்துகொண்டு, பருகற்கு இனிய பரங்கருணைத் தடங்கடலை, மருவித் திகழ்தென்னன் வாழ்கழலை நினைந்து அடியோம், திருவைப் பரவிநாம் தெள்ளேணம் கொட்டாமோ." அவர் கூறியாங்கு நினைத்தற்கு அரிய திருவுருவை, நினைப்பவர் மனத்தைக் கோயிலாக் கொண்டு அமுதாய் விளையுஞ் சங்கரனை நினைத்தவுடன் பெருங்கருணை வெள்ளப்பிரானாய் அவன் ஆட்கொள்வன் என்க. அருளை நல்கா தொழியான் என்று நம்பி, அவன்றன் நாமம் பிதற்றி, நயனநீர் மல்கி, வாழ்த்தி வாய்குழறி வணங்கி, மனத்தால் நினைந்துருகி, பல்கால் அவனைப் பாவித்துப் பரவி, 'பொன்னம்பலம் பொன்னம்பலம்' என்றென்று கதறி நிற்கும் உயிர்க்கு அவன் இரங்குவான் என்க. இன்னணம் ஊன்கெட்டு, உயிர்கெட்டு, உணர்வு கெட்டு, உள்ளமும் போய், 'நான்' கெட்டு, அவன் சரணைச் சார்ந்தவுடன், அவன் குருவுருவில் வந்து மரணம் பிறப்பு என்ற இவ்விரண்டின் மயக்கறுப்பன்.

அம்மயக்கத்தைத் தெளிவித்த வித்தகத் தேவனே மாதொருகூறனாய்த் திருப்பணிகள்கொண்டு அருளவல்லான். அவனே அத்திருப்பணிகளால் வரலாகும் இம்மை அம்மைப் பயன்கள் அத்தனையும் இவ்வுலகில்தானே அழியும்படி அருள்வன். அப்படி அருளினாலன்றிப் பிறப்பு ஒழிந்து வீடுபேறு கிட்டாதென்க.

ஆனால், உயிர்களாற் செய்யப்படும் திருப்பணிகள் பற்பலவே ஆயினும் அவை எம்மாத்திரம்? "சீ! இவ்வளவுதானா, இந்நேரந்தானா!!" என்று இகழுமாறு தோன்றுபவை. அவன் திருவடிக்கே அகங்குழையாமலும், அன்புருகாமலும் பூமாலை புனைந்து ஏத்தாமலும், புகழ்ந்து உரையாமலும், தேவ

தேவன் திருக்கோயிலைத் தூகாமலும் மெழுகாமலும், கூத்தாடாமலும், வியந்து அலறாமலும், நயந்து உருகாமலும் இருப்பதாகக் கூறி மாணிக்கவாசகரே வருந்துவார் ஆயின், நாம் செய்யும் பணியெல்லாம் எம்மாத்திரம்? அவரே பரவுவார் பக்கம் சேரவில்லையே என்றும், திருநாம அஞ்செழுத்தை எண்ணி இயல்பொடு ஓதவில்லையே யென்றும் வருந்துவாரானால், நாம் பாவி ஏத்தும் பணிகள் எம்மாத்திரம்? அவரே முட்டாது தட்டாது தப்பிலாது தண்மலர் இட்டு, நாத்தழும்பேற ஏத்தவில்லையே என்று வருந்துகின்றார் அன்றோ?

எனவே, செய்யும் பணியெல்லாம் நிரந்தரமானவையாய் இருக்கவேண்டும் என்பதே அன்னார் கருத்து எனத்தோன்றுகிறது. அது அன்னது ஆதலைக் கீழ்வரும் அவர்தம் திருவார்த்தைகளே வற்புறுத்தும்:—

i. "நின்றன் வார்கழற்கு அன்பு எனக்கு **நிரந்தரமாய்**
அருளாய்! நின்னை யேத்த முழுவதுமே." **(திருச்சதகம் 6)**

ii. "எம் கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க;
**கங்குல்பகல்** எம்கண் மற்றொன்றும் காணற்க."
**(திருவெம்பாவை 19)**

iii. "**வேண்டுந்தனையும்** வாய்விட்டலறி விரையார் மலர்தூவிப்
பூண்டு கிடப்பது என்று கொல்லோ." **(புணர்ச்சிப்பத்து 3)**

iv. "நெக்கு நெக்கு உள்ளுருகி யுருகி
**நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்**
நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தால் கூத்து நவிற்றிச்
செக்கர் போலுந் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர்சிலிர்த்துப்
புக்கு நிற்பது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே." **(புணர்ச்சிப்பத்து 8)**



இங்ஙனம் இடையீடின்றிச் செய்யப்படும் பணிகளை யல்லாமல் ஏனையவற்றையும் பணிகளாகக் கொள்ளவேண்டியவன் எம்பெருமான் என்க. அவன் அவற்றை அங்ஙனம் கொள்ளான் ஆயின், அவை பணிகள் ஆகா. இதனை, "அறம் பாவங்கள் பயன் தருவது கொள்வாரது வன்மை மென்மை பற்றியன்றிச் செய்வாரது வன்மை மென்மை பற்றியாதல், செய்வினைகளது வன்மை மென்மை பற்றியாதல் அன்று என்பதற்கு......." என்று சித்தியார் இரண்டாஞ் சூத்திர மூன்றாம் அதிகரண 29-ஆஞ் செய்யுட் பொழிப்புள் சிவஞான சுவாமிகள் கூறுவதால் அறிக.

நாயனையார் பேயனையார் செய்யும் அரைகுறைப் பணிகளைச் "சீ! சீ! எம்மாத்திரம்!!!" என்று இகழாது அவற்றையும் எம்பெருமான் ஏற்றருள்வது ஏன்? அந்நாயனையார் பேயனையாரை யன்றி மற்றோர் அடியாரும் இல்லையோ அவற்கு? இவ் ஆசங்கையை மாணிக்கவாசகரே,

"அடியார்தாம் இல்லையே யன்றி மற்றோர்
பேயனேன் இதுதான் நின்பெருமை அன்றே."
**(திருச்சதகம் 23)**

என்ற இடத்து எழுப்பி, அடுத்த செய்யுளில் சமாதானத்தைத் தந்திருக்கின்றார். அவன் நமது தாயாகவும் தாயின் பெருமானாகவும் உள்ளமையே அவன் ஏற்றருளக் காரணம் என்பதைக் காட்டியுள்ளார். இதுபற்றியே போலும் "நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!" என்றும் அவர் அருளிச் செய்தார் சிவபுராணத்தின் கண்ணே. இக்கருத்தை யெல்லாம் உட்கொண்டே "சீயேதும் இல்லாது என் செய்பணிகள் கொண்டருளும் தாயான ஈசன்" என நவின்றுள்ளார் திருக்கோத்தும்பியில், 'நான் செய்கின்ற பணிகளை' என்னாது, என்னால்

செய்யப்படும் பணிகளை' என்று அவர் கூறியிருப்பதிலுள்ள நயம் கண்டு இன்புறத்தக்கது. இறைவனே நம்மை ஆட்டுவித்தும் பாட்டுவித்தும் பணிவித்தும் வருகின்றான் என்ற உண்மை சுட்டப்படுதல் காண்க.

அவன் நம் தாய்தந்தையருடைய தாய்தந்தையருக்குத் தாய்தந்தை. அவனே இடரைக்களையும் நம் தாய். அவனே வானகத்து அமரர்க்கும் தாய். இதுபற்றியே மணிவாசகப் பெம்மானும் "அம்மையே, யப்பா!" என்றும், "தாதாய்! மூவேழ் உலகுக்குந் தாயே" என்றும் அழைத்தனர். பின்னரும் "தாயாய் நகிலைத் தருவானே! தாயே என்று உன் தாள் அடைந்தேன்" (ஆனந்தமாலை 5) என்று பகர்ந்தனர்.

"சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி."

என்று திருவகவலிற் போற்றினர். மற்றும் "நாயான நம் தம்மை ஆட்கொண்ட நாயகனைத் தாயான தத்துவனை" என ஆனந்தக்களிப்பால் அம்மானை ஆடப் பாடினர்.

ஆணும் அவன் பெண்ணும் அவன்; தந்தை அவன் தாயும் அவன். தோலொடு துகிலும் குழையொடு தோடும் சூலத்தொடு வளையும் உடைய தொன்மைக்கோலத்தில் அவன் தானும் தனது தையலுமாக வந்து ஆட்கொள்வான். அவன் மாதினொடு வந்தருளி அந்தண்மையனைப் ஆட்கொள்வான். சமயாசாரியர் நால்வருமே இம்மாதொருபாகக் கோலத்தைக் கண்டு கண்டு பாடியுள்ளார்.

(தொடரும்)

187107

உ

சிவமயம்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

## ஏழாந் திருமுறை

## சைவ சித்தாந்த மஹா சமாஜ 2-ம் பதிப்பு

இதில் சுவாமிகள் தேவாரம், அவர் பாடின முறையில் அவருடைய சரித்திரத்துடனும், இன்பமும் அன்பும் பெருகும் முக்கியமான பெரியபுராணச் செய்யுள்களுடனும், அ. சோமசுந்தரம் செட்டியார், M. A. அவர்கள் எழுதிய குறிப்புரை விஷய அகராதியுடனும் தேவாரத்திற்கு எளிதில் பொருள் விளங்கும்படியான வகையில், பதிப்பிக்கப்பட்டுள்ளது.

தேவாரத்தில் பொதிந்து கிடக்கும் சைவசித்தாந்த சாஸ்திரக் கருத்துக்கள், அகச்சான்றுகள், பதி பசு பாச இலக்கணங்கள், வழிபாட்டு முறை முதலிய பல விஷயங்கள் பாகுபாடு செய்யப்பட்டு நன்கு விளங்குமாறு விஷயஅகராதி என்னும் தலைப்பின்கீழ் இதில் அச்சிடப்பட்டுள்ளன.

தேவாரத்தின் அரும்பதங்களுக்கு உரையும், பல இடங்களில் விசேஷ உரையும், மேற்கோளும் சேர்க்கப்பட்டுள்ளன.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரச் சிறப்புகள் பல, பெரியோர்களால் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. சேக்கிழார் பெருமான் சுந்தரர் பாடல்களை "இத்தாரணி முதலா எல்லா உலகங்களும் உய்ய" எடுத்த பாடல்களென்று புகழ்ந்து கூறுகின்றார். தேவாரத்தை ஓதுவதன் முழுப்பயனை அடைய வேண்டுமானால், அவற்றின் பொருளை நன்குணர்ந்து ஓதுதல் வேண்டும். அந்த வழியில் பேருதவி செய்யவல்லது இத் தேவாரப் பதிப்பு.

இப்புத்தகம் ஒவ்வொரு சைவரிடத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. தேவாரம் ஓதுபவர்களுக்கு அத்தியாவசியம். திருமுறைப் பாராயணம் செய்பவர்கள் முதல் ஏழு திருமுறைகளை இந்த முறையில் சரித்திரத்தோடு முக்கியமான பெரியபுராணச் செய்யுள்களுடன் பாராயணஞ்செய்தால் பன்மடங்கு பலனைத் தரும். 12 திருமுறைகளையும் பாரா

யணம் செய்ய இயலாதவர்கள் இந்த ஏழாந்திருமுறை ஒன்றினையே நியதியாகத் தினந்தோறும் சுவாமிகள் சரித்திரத்துடன் பெரியபுராணச் செய்யுள்களோடு பாராயணஞ்செய்து வந்தால் இம்மையில் எல்லா நன்மைகளையும் அடைவதுமல்லாமல் மறுமையில் பேரின்ப வாழ்வையும் எளிதில் பெறலாம். அவகாசமுள்ளவர்கள் தினம் 10 பக்கங்கள் படித்து வந்தால் ஒரு மாதத்தில் முடித்துவிடலாம். மற்றையோர் அவகாசத்திற்குத் தகுந்தபடி சில மாதங்களுக்குள் பூர்த்தி செய்யலாம். இப்புத்தகம் ஒருமுறை இருமுறை படித்துப் போட்டுவிடும்படியானதல்ல; ஒவ்வொருவரும் தங்கள் ஆயுட் கால முழுமையும் பன்முறை படிக்கத்தகுந்த புத்தகம் ஆகும். படிக்கப் படிக்கப் புதிது புதிதான இன்பமளிக்கத்தக்கது.

இது கிரௌன் அளவில் 23 பாரங்கள் கொண்ட 368 பக்கங்களுடையதாய்ப் பைகா எழுத்திலும் முக்கிய இடங்களில் தடித்த எழுத்திலுமாக அச்சிடப்பட்டு, அழகாக காலிகோ கட்டடம் செய்யப்பட்டுள்ளது.

தனிப் பிரதி அணா 12. 6 பிரதிகள் ரூபா 4.

புத்தகங்கள் வி. பி. தபாலில் அனுப்பப்படமாட்டா. வேண்டியவர்கள் அடியிற் கண்டபடி முன்பணம் அனுப்ப வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| தனிப் பிரதி | 1 | 0 | 6 | தபால் பார்சல் மூலம் அனுப்ப. |
| 6 பிரதிகள் | 4 | 0 | 0 | ரயில் ,, ,, ,, |
| 12 பிரதிகள் | 7 | 12 | 0 | ,, ,, ,, ,, |

கிடைக்குமிடங்கள் :—

1. சைவ சித்தாந்த மஹா சமாஜம்,
22-A, "திருவருளகம்", கல்லுக்காரத் தெரு,
மயிலாப்பூர், சென்னை.

2. அ. சோமசுந்தர செட்டியார், M. A.,
15, கிழக்கு மாதாகோவில் தெரு,
இராயபுரம், சென்னை.

3. முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

4. கவுணியன் பிரஸ், பிராட்வே, சென்னை.

Sadhu Press, Madras.

எல்லோரும் அவருடைய அதிகாரத்திற்குள் இருக்கவேண்டியது
மத் சம்பந்தமான வேலைக்காரர்களும் ஊழியத்திற்காகச் சொத்
உரிமையுள்ளவர்களும் மடாதிபதியின் அதிகாரத்திற்குள்ளிருக்க
வேண்டியது. இந்த இரு கூட்டத்தாருக்கும் தண்டனை ஏற்பட்டால்
போர்டுக்கு அப்பீல் உண்டு.

வருடா வருடம் (Budget) செலவுத் திட்டம் எக்சிக்யூட்டிவ்
ஆபீசர் போர்டுக்கு அனுப்பவேண்டியது. அதன் மேலே திட்டம்
ஏற்படுத்த வேண்டியது. அவசியம் ஏற்பட்டால் அனுமதி இல்லாமலே
எக்சிக்யூட்டிவ் ஆபீசர் செலவு செய்யலாம். கணக்குகளை ஆடிட்டர்
தணிக்கை செய்து போர்டுக்கு ரிப்போர்ட்டு அனுப்பவேண்டியது.
ஆடிட்டர் செலவு மடத்தைப் பொறுக்க வேண்டியது.

மடத்திலிருந்து தொகை வாராவிட்டால் சொத்துக்களைக் கலெக்
டர் மூலம் ஏலம்போட அதிகாரமுண்டு. போர்டாருக்குக் கணக்குகளை
யும் சொத்துக்களையும் நேரிற்போய்ப் பரிசீலனை செய்யவும் மடங்கள்
சம்பந்தப்பட்டமட்டில் அவசியமான செலவுகளைத் தாங்களே செய்து
தொகைகளை ஈடு செய்யவும் அதிகாரமுண்டு. மடத்தின் உள் நிர்
வாகத்தை இன்னபடி செய்யவேண்டுமென்று உத்திரவிடவும் அதி
காரமுண்டு. போர்டு அனுமதியில்லாமல் 5 வருஷத்திற்கு மேற்பட்ட
கட்டுக் குத்தகை, கிரயம், பந்தகம், பரிவர்த்தனை செய்ய அதிகார
மில்லை. ஆனால் போர்டு செய்யும் உத்தரவுக்கு மேலே எக்சிக்யூட்டிவ்
ஆபீசரும் மடாதிபதியும் அக்கரையுள்ள எவரும் வழக்குப் போட்டுக்
கொள்ள அதிகாரமுண்டு. கோர்ட்டு மூலமாய் போர்டாரும் அக்கரை
யுள்ள எவரும் ஒரு மடாதிபதியை நியமிக்கவும், நீக்கவும் வழக்குப்
போடலாம். பிரயாணிகளுடைய வசதிக்காகவும் சுகாதாரத்திற்தாக
வும் மடத்துப்பணத்தைச் செலவழிக்க எக்சிக்யூட்டிவ் ஆபீசருக்கு அதி
காரமுண்டு. இன்னவகை வருமானத்தை இன்னவகைச் செலவுக்குத்
தான் செலவு செய்யவேண்டுமென்று சொல்ல போர்டுக்குத்தான் அதி
காரமுண்டு. ஆனால் அதனையும் சிவில் கோர்ட்டில் ஆக்ஷேபிக்கலாம்.

மடங்கள் சம்பந்தமாய் நடக்கிற சகல கோர்ட்டுச் செலவுகளும்
மடத்துப் பண்டிலிருந்து ஈடு செய்துகொள்ளலாம். வசூலாகாவிட்
டால் கலெக்டர் மூலமாய்ச் சொத்துக்களை ஏலம்போட்டு ஈடு செய்து
கொள்ளலாம். வருமானத்தின்பேரில் 100-க்கு 1½ போர்டாருக்கு
உதவித்தொகை கொடுக்கவேண்டியது. அது பாக்கி விழுந்தாலும்
மேலே கண்டபடி ஏலம்போட்டு ஈடு செய்துகொள்ளலாம்.

ஒவ்வொரு மடத்துக்கு ஏற்பட்ட வழக்கங்களும் மடத்தில் சில
ருக்கு இருக்கக்கூடிய பாத்தியதைகளும், வருமானங்களும், மரியாதை
களும் இந்தச் சட்டத்தினாலே பாதிக்கப்படமாட்டா.

---

## சென்னைக்கு ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் விஜயம்

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் பட்டணப் பிரவேசம் செய்து, சென்னை
எழும்பூர் போலீஸ் கமிஷனர் ஆபீசு வீதியிலுள்ள திரு. டி. வி. ஆதி
சேஷ முதலியார் பங்களாவில் (6-6-1935) சென்ற வியாழக்கிழமை
விஜயம் செய்து தங்கியுள்ளார்கள். சுவாமிகள் ஒரு மாதத்துக்குக்
குறையாமல் சென்னையி லிருப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 8. No. 6

## அப்பர் திருநாள், சிக்கராஜபுரம்

இஃது, சித்திரைச் சதயத்தன்று வழக்கம்போல் வழிபாடு, அட்டிட்டல், சொற்பொழிவு முதலிய சிறப்புக்களோடு நடைபெற்றது. வித்வான் - திரு. வல்லம். வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள் தலைமையில் திருவாளர்கள் - முனிரத்தின முதலியாரும் சுந்தர உடையாரும் 'ஆலய வழிபாடு', 'அப்பர்' என்பனபற்றியும், தலைவர் 'நாம் ஏன் பிறந்தோம்' என்பதுபற்றியும் பேசினார்கள். இவ்வூரில் இது எட்டாவது வருட நிகழ்ச்சி.

---

# சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும்

நமது சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பு; 1136 பக்கங் கொண்டது ; நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப் பெற்றது ; அழகான முழுக்கலிக்கோ பைண்டு செய்யப்பெற்றது ; மிகத்திருத்தமாகப் பல ஏட்டுப்பிரதிகளைக் கொண்டு மூலமும் உரையும் செப்பஞ் செய்யப்பெற்றது ; சிவப்பிரகாசம், திருவருட்பயன், உண்மைநெறி விளக்கம் ஆகிய மூன்று நூல்கட்கும் இதுவரை அச்சிடப்பெறாத சிந்தனையுரையோடு கூடியது ; துகளறுபோதம் என்ற நூலின் மூலத்தை அநுபந்தமாக வுடையது.

தனிப்பிரதி விலை ரூபா மூன்று. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 12.

நான்கு பிரதிகள் விலை ரூபா பத்து.

ரயில்வே பார்சல், தபாற்கூலி வேறு. விவரங்கட்கு உடனே ரிப்ளை கார்டு எழுதுக. சிலோன் வாசிகட்கு வி. பி. இல்லை. இன்று முதல் ஒருமாதம்வரையில் 1935ஆம் ஆண்டுக்குரிய சந்தாவைச் செலுத்திய சமாஜ அங்கத்தவர்க்குமட்டும் ஒவ்வொரு பிரதி ரூபா இரண்டு என்ற விலைக்குத் தரப்படும். இதைப் பெறுவதற்கு விலையும் தபாற்கூலியும் முன்பணமாகச் செலுத்தப்படவேண்டும். வி. பி. இல்லை. பிரதிகள் சிலவே யுள்ளபடியால் உடனே பணம் அனுப்பிப் பெறுக.

இங்ஙனம்

10—6—1935. ம. பாலசுப்பிரமணியன்

காரியதரிசி.

---

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.